Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (11-8-66) இதழ் 182

பராபவ ஆடி 26 ரபீஃ ஆகி 23 வியாழக்கிழமை

## ஜவுளி வாங்க 2 புதிய கூப்பன் புள்ளிகள்

கொழும்பு, வியாழன்

இன்று முதல் இரண்டு புதிய கூப்பன் புள்ளிகள் ஜவுளி கொள்முதல் செய்வதற்காக அனுமதிக்கப்படவிருக்கின்றன.

அரிசிக் கூப்பன் புத்தகத்தில் 103, 104-வது புள்ளிகளை ஜவுளிக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. அடையாள அட்டைகளில் 7-வது, 8-வது புள்ளிகள் ஜவுளிக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தப் புள்ளிகளை இனி சமர்ப்பித்து பாவனையாளர்கள் ஜவுளிபெற்றுக்கொள்ளலாம். ஒரு கூப்பன் புள்ளிக்கு 2 யார் வீதம் இரண்டு கூப்பன்களுக்கு 4 யார் துணிகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

புதிய ஜவுளி கட்டுப்பாட்டு விலைபற்றிய ஒரு கஸட் அறிவித்தல் நேற்று நள்ளிரவு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

# அனில் முனசிங்கா பதவி இழந்தார்!

## 28பேர் மீது கவர்னர் ஜெனரலுக்கு புகார் செய்யப்படும்

### தேர்தல் ஆட்சேப வழக்கில் தீர்ப்பு

கொழும்பு, வியாழன்

அகலவத்தை தேர்தல் தொகுதியிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. அனில் முனசிங்கா தெரிவுசெய்யப்பட்டது செல்லுபடியாதென நீதியரசர் ஏ. எஸ். எஸ் சிறிமானே நேற்றுத் தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்பின் காரணமாக திரு. அனில்முனசிங்கா தமது எம். பி பதவியை இழந்துவிட்டார்.

திரு அனில்முனசிங்கா திருமதி பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டாட்சியில் ஒரு மந்திரியாக இருந்தார். அவர் சமசமாஜக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராவார்.

திரு அனில்முனசிங்கா அகலவத்தை தேர்தல் தொகுதியில் சமசமாஜகட்சியின் சார்பில் போட்டியிட்டு பிரதிநிதிகள் சபையில் எம். பி. யாக விருந்தார் இவருடைய தேர்தல் செல்லுபடியாகதென தீர்ப்பளிக்கும்படி கோரி சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் ஆட்சேப வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதியரசர் சிறிமானே குற்றச் சாட்டுகள் எல்லாம் நிரூபிக்கப்பட்டு விட்டதாகக் கூறி தேர்தல் செல்லுபடியாகாதென தீர்ப்பளித்தார்.

லைலஞ்சம் பெற்றதாகவும் செல்வாக்கை முறைதவறி பயன்படுத்தியதாகவும், பயமுறுத்தல் புரிந்ததாகவும் இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்தன. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 28 பேர் மீது கவர்னர் ஜெனரலுக்கு ஏன் புகார் செய்யக்கூடாது என்பதற்கு காரணம் காட்டும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு நீதியரசர் கட்டளை இட்டிருக்கிறார் செல்வாக்கை முறைதவறி உபயோகித்ததாக 16 பேர் மீதும் லைலஞ்சம் பெற்றதாக 12 பேர் மீதும்குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. இவர்களில் மூன்றுவது நாலாவது எதிரிகளை கோர்ட்டில் ஆஜராகும்படி நோட்டீஸ் பிறப்பிக்கப்படவிருக்கின்றது.

## சில துணிகளை கூப்பன் இல்லாமல் வாங்கலாம்

### பாவனையாளருக்கு புதிய சலுகை

கொழும்பு, வியாழன்

ஜவுளி வகைகளில் கூப்பன் இல்லாமல் பெறக்கூடியவை பின்வருமாறு: டஸ்ஸூர், சட்டிங்டிரில், வெள்ளை டிரில், ஜாக்கட்சாறி துணிகள், அச்சடித்த சேர்ட் துணிகள். அச்சடித்த ஷீட் துணிகள், சாயமூட்டிய பருத்தித் துணிகள்.

இந்தத் தகவல்கள் நேற்று வெளியிடப்பட்ட ஒரு அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன.

இனிமேல் எல்லாவித இறக்குமதியாகும் துணிகளும் விலைக்கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

கூப்பனுக்கு அல்லது கூப்பன் இல்லாமல் பின்வரும் துணிகளைப் பெற்றுக்கொள்ளலாம் நீலநிற பிரில், வெள்ளைப்பம்ளின், ரேயோன்ஸ், வர்ண மூட்டப்பட்ட பாப்ரிக், காட்கி ஷரில் வெள்ளைமல் லாங்குளோத் இவைகளைக் கூப்பனின்றி வாங்குவதானல் மேலதிகமாக ஒரு யாருக்கு ரூ 1-25 சதம் கொடுக்கவேண்டும்.

வாயில் துணிகள், அச்சடித்த பருத்தி கேம்பிரிஜ், போன்றவைக்குக் கூப்பன் இல்லை.

வியட்னும்

## தாய்லந்து யோசனையை ரஷ்யா நிராகரித்தது

மாஸ்கோ, ஆக. 10

வியட்னும் சம்பந்தமாகத் தாய்லந்து தெரிவித்த சமாதான யோசனையை ரஷ்யா நிராகரித்துவிட்டது.

ஏற்கனவே இந்த யோசனையை வடவியட்னுமும், சீனுவும் நிராகரித்தது தெரிந்திருக்கும்.

இதுசம்பந்தமாக ரஷ்யப் பத்திரிகை 'பிராவ்டா' குறிப்பிடுகையில் தாய்லந்தின் யோசனை ஜெனிவா உடன்பாட்டை அகற்றுவதாய் இருப்பதாயும் அமெரிக்காவுக்கு அது சாதகமாயிருப்பதாயும் கூறியது.

வியட்னும் பிரச்னையைத் தீர்க்க ஆசிய மகாநாடு ஒன்றை நடத்தவேண்டுமெனத் தாய்லந்து யோசனை கூறியிருந்தது.

## சிறுபான்மையோருக்கு நீதியாக அமுலாக்கவேண்டும்

### உயர்கல்வி மசோதா பற்றி தீவுப்பகுதி எம். பி

கொழும்பு, வியாழன்

'இலங்கை நாடு இனிமேலும் பிளவுபட்டுஇருக்க முடியாது. மதங்களின் பேரால் பல்கலைக் கழகங்கள் அமைக்க விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவி மடுக்கக் கூடாது. அதனுல் நாடு மீண்டும் பிரிந்து கிடக்கவே வழியேற்படும்' என்று தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் நேற்று பிரதிநிதிகள் சபையில் கூறினுர்.

திரு. நவர்த்தினம் உயர்கல்வி மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டுஉரை நிகழ்த்தினுர். தேசியக்கல்வி சிறுபான்மை மக்களுக்கு நீதியான முறையிலேயே அமுல் நடத்தப்படும் என்று தமிழரசுக்கட்சி நம்புகின்றது. தேசியம் என்று சொல்லப்படும்போது சிங்களமயமாக்கப்படுவதாகவே தமிழ்ப்பேசும் மக்கள் பயந்துவந்திருக்கிறுர்கள் அந்த நிலை இனிமேலும் நீடிக்க விடப்படாது என்று அவர் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள

( 8-ம் பக்கம் பார்க்க)

## மதுரையில் ஸ்ரீ மணிபாகவதர் "தம்பிரான் சுவாமிகள்" ஆனுர்

மதுரை, ஆக. 10

வண்ணை ஸ்ரீ ஸி. எஸ். எஸ். மணிபாகவதர், இன்று ஆடி கிருத்திகையன்று திருஞானசம்பந்தர் மடாலயத்திலே குருமகா சன்னிதானத்திடம் பூஜா முகத்தில் மந்திர காஷாம் பெற்றுதுறவுபூண்டார். ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள் என்ற நாமத்தையும் சன்னிதானம் அவர்களுக்கு அளித்தார்.

சன்னியாசம் பெற்றபின் 16-ந் திகதி மதுரை கோவில் ஆடி வீதியிலே கதாகாலட்சேபத்தை ஸ்ரீ சன்னிதானத்தின் தலைமையில் செய்துவிட்டு, அநேகமாக இம்மாதம் 23 ந் திகதி விமானத்தில் யாழ்ப்பாணம் திரும்புவாரென்று தெரிகிறது.

## ஹன்சாட்டில் வெளியாகும் பேச்சுகளுக்கு மொழிபெயர்ப்பு

### கிளிநொச்சி எம். பி. கொண்டுவரவிருக்கும் பிரேரணை

கொழும்பு, புதன்

'ஹன்சாட்டில் பேச்சுக்கள் முதலியனவற்றின் மொழி பெயர்ப்பு இடம் பெறுதல், பிரதிநிதிகள் சபையில் சிங்கள மொழியில் நிகழ்த்தப்படுகின்ற பேச்சுக்களும் அம்மொழியில் அளிக்கப்படுகின்ற விடைகளுக்குரிய தமிழ் ஆங்கிலமொழிபெயர்ப்புக்களையும், தமிழ்மொழியில் நிகழ்த்தப் படுகின்ற பேச்சுக்களும் அம் மொழியில்அளிக்கப்படுகின்றவிடைகளுக்குரிய சிங்கள, ஆங்கில மொழி பெயர்ப்புக்களையும் ஹன்சாட்டில் இடம் பெறச் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனக் கோரும் பிரேரணை ஒன்றை ஜனபிரதிநிதிகள் சபையில் கொண்டு வருவதற்கான முன்னறிவித்தலை கிளிநொச்சி எம். பி. திரு. கா. போ. இரத்தினம் கொடுத்துள்ளார். திரு. இரத்தினம் கொண்டுவரவிருக்கும் மற்றொரு பிரேரணைவருமாறு:

தொழிற் சட்டங்களைத் திருத்துதல், தோட்டத் தொழிலாளர்களுட்படசகல தரங்களையும் சேர்ந்த தொழிலாளர்களினதும் உரிமைகளைப்பாது காக்கும் நோக்கமாகவும் எல்லாவிதமான கைத்தொழிற் பிணக்குகளையும் விரைவாகத்தீர்த்துவைக்கும்பொருட்டு சக்திமிக்க அமைப் பொன்றினை நிறுவும் நோக்கமாகவும், காலத்திற் கொவ்வாதளவும் பழமை வாய்ந்தனவுமான இந்நாட்டின் தொழிற் சட்டங்களைத் திருத்தியமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

## தொழில் கல்வி

கொழும்பு, வியா.

தொழிலாளர் கல்விக்கான ஏழாவது தொடர் வகுப்புகளை தொழில் அமைச்சு ஆரம்பிக்கவிருக்கின்றது. இதில் கலந்துகொள்வதற்கென 2 நபர்களை அனுப்பிவைக்கும்படி தொழில் அமைச்சு எல்லா தொழிற் சங்கங்களையும் கேட்டிருக்கின்றது. இப்படி கலந்துகொள்ளுபவர்களில் 60 பேரை தொழில் அமைச்சு தெரிவுசெய்து மேல்கல்வி அளிக்கும் என்று தெரிகின்றது.

## ராஜாஜி - நாராயண் சம்பாஷணை

சென்னை ஆக. 10

ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண்தாம் ஷேக் அப்துல்லாவுடன் நடத்தியசம்பாஷணைகள் குறித்து ராஜாஜியுடன் 50 நிமிடம் சம்பாஷணை நடத்தினுர்.

இதுவிஷயமாக எதுவும் சொல்ல நாராயண் மறுத்துவிட்டார்.

பொதுவானநிலைமைபற்றி தாங்கள் இருவரும் சம்பாஷித்ததாகவும், சிலர் நினைப்பதுபோல் அவ்வளவு நம்பிக்கையற்றதாய் இல்லையென்றும் ராஜாஜி கூறினுர்.

அவர் இதை நிருபர்களிடம் கூறிக்கொண்டிருந்தபோது ஆலயமணி அடித்தது.

'பார்த்தீர்களா, மணி அடிக்கிறது, இது ஒரு நல்ல சகுனம்'' எனராஜாஜி கூறினுர். அதற்குமேல் எதுவும் சொல்ல ராஜாஜி மறுத்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## கல்வி

**வகுப்புகள்**

ஜி. ஸி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் முதலிய வகுப்புகளுக்கு இன்னும் சில வெற்றிடங்களே உள்ளன. விடுதி வசதியும் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 825

**பிரவேசங்கள்**

ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல் வகுப்புகளுக்கு இப்பொழுது பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பெண்களுக்குத் தனி விடுதி வசதி உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 826

**வகுப்புகள்:-**

வெளியிடங்களில் படிப்பிக்கும் ஆசிரியர்கட்கான விடுமுறைகால G. A. Q. வகுப்புகள் (இரண்டாம் ஆண்டு) இரண்டாம் தவணை லீவுடன் ஆரம்பமாகிறது. கலைக்கழகத்தின் பழைய அங்கத்தவர்களது B. A. வகுப்புகளும் மிக விரைவில். நீங்களும் அங்கத்தவராக தொடர்பு கொள்ளுங்கள்: காரியதரிசி, Northern Teachers' Academy, 75, Kathi-Adoobucker Road, Jaffna. 838

**மாணவ ஆசிரியர்:**

மேற்படி பரீட்சைக்கு 15-8-66-ல் இருந்து குறைந்த கட்டணத்துடன் முழு நேர வகுப்பு ஆரம்பமாகின்றது. மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 841

## விற்பனைக்கு

**வான் கோழிகள்:**

முட்டையிட்டுக் கொண்டிருக்கும் இரண்டு பேட்டு வான் கோழிகளும் ஒரு சேவலும் விற்பனைக்குண்டு. A. T. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 840

**லொறியின் பொடி:**

மூன்றரைத் தொன் ஒஸ்ரின் லொறியின் பொடி மட்டும் (Body) விற்பனைக்குண்டு. விபரத்துக்கு நேரே தொடர்புசெய்யவும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 836

## வாடகைக்கு

**வீடு:-**

பண்டத்தரிப்பில் கிரிமலை றேட்டில் ‘இரத்தினவில்லா’ என்னும் பெரிய வீடு வளவு காலியாக உள்ளது. ஒரு ஒய்வுபெற்ற குடும்பத்திற்கு கொடுக்கலாம். 837

## வைத்தியம்

தொய்வு, கசம் நீரிழிவு, சிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Richard Chamberlain
Yvette Mimieux
in
**Joy in the Morning**
(M. G. M'S Color)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பணத்தோட்டம்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**Canadian Mounties**
vs
**Atomic Invaders**


# ஜி. ஸி. ஈ. தராதரப்பத்திரங்கள் இவ்வாரத்தில் கிடைக்கும்

கொழும்பு, புதன்

1962-ம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜி ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றிய 1,30,000 மாணவர்களுக்குத் இவ்வாரத்தில் தராதரப்பத்திரங்கள் கிடைக்கவிருக்கின்றன.

1963-ம் ஆண்டிலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றிய 700,000 மாணவருக்கும் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) தராதரப் பத்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றிய 60,000 மாணவருக்கு இம்மாத முடிவில் கல்விப்பகுதியினர் ஜி. ஸி ஈ. தராதரப் பத்திரங்களை அனுப்புவார்கள்

‘சிங்களச் சட்டத்தினல்

# வேலையிழந்தோருக்கு நியமனம் வேண்டும்’

யாழ்ப்பாணம், வியா.

சிங்களத் தேர்ச்சியின்காரணமாக பதவியிலிருந்து விலகிக்கொண்ட தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்திலோ, கூட்டுத்தாபனங்களிலோ நியமனம் வழங்கப்படவேண்டுமென்ற தீர்மானம் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டின் இரண்டாம்நாள் மாலை நிகழ்ச்சியான தேசிய தொழிற்சங்க சம்மேளன மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:—

கடந்தஅரசாங்கத்தாலும் தேசிய அரசாங்கத்தாலும் அங்கீகரிக்கப்பட்டதான இந்துப்பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் அதிவிரைவில் நிறுவித்தருமாறு மகாநாடு பிரதம மந்திரியவர்களையும், கல்வியமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றது.

நெடுங்காலமாகஅரசாங்க சேவையாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாடுகளைப் போக்கவும், வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஆராயப்பட்ட புதிய ஒரு சம்பளத்திட்டத்தை வகுக்கவும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் கொண்டதான சம்பள நிர்ணய சபையொன்றினை நியமிக்குமாறு இம்மகாநாடு பிரதமரை வேண்டுகின்றது.

சிங்களத் தேர்ச்சி பெறுத காரணத்தால். வருடாந்த சம்பள உயர்ச்சி நிறுத்தப்பட்டுள்ள சகல இலாகாக்களையும் சேர்ந்த சில்லறை ஊழியர்களின் உயர்ச்சிப் பணத்தை உடனடியாக வழங்க வகைசெய்வதன் மூலம், சில்லறை ஊழியர்களின் உயர்ச்சிக்கு சிங்களத் தேர்ச்சி தடையாகாதிருக்குமாறு வழிசெய்யும்படி பிரதமரையும், நிதியமைச்சரையும், இம்மகாநாடுகேட்டுக்கொள்கின்றது.

முன்னைய அரசாங்கங்களினுலும், தேசிய அரசாங்கத்தினுலும், அங்கீகரிக்கப்பட்டு 1955.ம் வருடம் தேசியஅரசாங்கத்தின்முதல் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெற்றதும், தென்னக்கூன் கமிஷனின் சிபார்சினைப் பெற்றதுமான அரசாங்க ஊழியருக்கு அரசியலுரிமை வழங்கும் சிபார்சினை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு இம் மகாநாடு பிரதமரை மிக விநயத்துடன் வேண்டிக் கொள்கின்றது.

சகல பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும், மொழி வேறுபாடின்றி சமமானசம்பளம் வழங்கவும், அவர்களது இன்றைய லீவுநாட்கள் குறைக்கப்படாதிருக்க சகல ஆசிரியர்களதும் சேவை மூப்பு அட்டவணையை உடன் தயாரித்து பதவி உயர்வு. உயர்கல்வி வசதி என்பவற்றில் முரண்பாடுகளின்றி இருக்கவும், இடமாற்றத் திட்டங்களை வகுப்பதில் ஆசிரியதொழிற்சங்கப்பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ளவும், ஆவன செய்யுமாறு இம்மகாநாடு பிரதம மந்திரியவர்களையும், கல்வி மந்திரியவர்களையும்கேட்டுக்கொள்கின்றது

இச்சம்மேளனம் சுருட்டுத் தொழில் வீழ்ச்சியடையச் செய்வதற்கு காரணமாயிருக்கும் சுருட்டுத்தொழில் மேல் சுமத்தியிருக்கும் மூன்றுசதவீத வரியை நீக்கஞ்செய்ய இச்சங்கத்தாலான முயற்சி எடுக்கத் தீர்மானம் செய்கிறது.

—

## பிரதமருக்கு இந்தியசால்வை

யாழ்ப்பாணம், புதன்

நேற்று மாலை பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவும் தேசிய அரசாங்க மந்திரிகளும் மற்றும் பிரமுகர்களும் நாச்சிமார் கோவிலடியிலிருந்து ஊர்வலமாக முற்றவெளிக்கு அழைத்து வரப்பட்டபோது கந்தர்மடம் சந்தியில் பிரதமர்முதலானேருக்கு திரு. கே. வி. கனகரத்தினம் ஜே. பி. இந்தியாவிலிருந்து தாம் விசேஷமாகத் தருவித்திருந்த பச்சை நிறமுள்ள 21 சால்வைகளை அணிவித்தார்.

பின்பு முற்றவெளிக்கூட்டத்தில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட 10 ரூத்தல் நிறையுள்ள விலையுயர்ந்த இரண்டு மாலைகளை பிரதமருக்கும் திரு. ஜி. ஜி.பொன்னம்பலத்துக்கும் திரு. கனகரத்தினம் சூட்டினர்.


விளம்பரம்

யாழ்ப்பாண மாநகரசபை அளிக்கும்
**‘பௌர்ணமி தின’**
கலைநிகழ்ச்சிகள்

1. மேற்படி வரிசையில் யாழ்ப்பாண மாநகரசபை நடத்திவந்த ‘‘பௌர்ணமி தின’’ கலை நிகழ்ச்சிகளை மீண்டும் தொடருவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வரிசையில் முதல் நிகழ்ச்சி 30-8-66-ல் நடைபெறும். நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 20-8-66-ம் திகதிக்கு முன் யாழ்ப்பாண மாநகர ஆணையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பித்தல் வேண்டும்.

3 நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவோருக்கு கௌரவப் பணம் தவிர்த்து வேறு எச்செலவிற்கும் பணம் தரப்படமாட்டாது இசை, நடன நிகழ்ச்சிகளுக்கு ரூ 25/-ம், நாடகத்திற்கு ரூ. 50/-ம் கௌரவப் பணமாகத்தரப்படும். (வாத்தியங்கள், சித்திரத்திரைகள் ஆகியவற்றை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வோர் தமது செலவில் கொண்டுவரவேண்டும்.)

4 ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்குமான நிகழ்ச்சித் திட்டம் வருமாறு:-

இசை நிகழ்ச்சி—மாலை 6-00-7-30 மணி வரை.
நடனநிகழ்ச்சி-7-3-08-30 மணிவரை.
நாடகம் 8-45-9-45 மணி வரை.

பௌர்ணமி தின கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமாக மேற்கொண்டு தேவைப்படும் விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகர அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


கட்சன் செல்வராசா
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
3-8-1966 917

**வேலைவேண்டுவோர் விரைந்து வாருங்கள்**

வலி கிழக்கு பல நோக்கக் கூட்டுறவுச் சமாசக்கல்லுண்டாய் உப்பளத்தில் நாட்கூலிக்கோ, குத்தகையாகவோ விளைந்தஉப்பைச்சேகரித்துக் கொடுப்பதற்கு நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் உடன் தேவைப்படுகின்றது

இந்த அரிய வேலைவாய்ப்பைத் தவறவிடாதீர்கள். விபரம் அறிய விரும்புவோர் சமாசத்திலோ அல்லது உப்பளத்திலோ கேட்டறியலாம்.

வி. கந்தசாமி,
வலி.மேற்கு ப.நோ.கூ,ச.
சமாசம்,
சங்கானை.
நிர்வாகச் செயலாளன்
7-8-66 914




சிந்திவிட்ட
**சூப்பர் குயிங்**
றேயல் புளூ
வாஷபிளேயிட்டுத்
துக்கிக்காதீர்!
கழுவி விடலாம்!

உங்கள் பேனவை எந்நேரமும் துப்புரவாக வைத்திருப்பதற்கு அவசியமான சொல்வ் - எக்ஸ் கொண்டது. சூப்பர் குயிங்கில் ட்டுமே இது உண்டு. நிரந்தரமான எழுத்துக்கு மங்காத நீலம், கரு நீலம், டர்குயிஸ், சிவப்பு, பச்சை அல்லது கறுப்பைத் தேர்ந்தெடுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,
மகாராஜா கட்டிடம்
பாங்ஷால் வீதி, கொழும்பு.

பாக்கர் பென் கம்பனியின் ஒரு தயாரிப்பு.

இன்று முதல் குதூகல ஆரம்பம்

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நரா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) — விஜிதா (ஹட்டன்)

**சிவாஜி, எஸ். எஸ். ஆர்.,**
**எம். ஆர். ராதா, பாலையா, முத்துராமன், நாகேஷ், தேவிகா, புஷ்பலதா**
மற்றும் பலர் நடித்த
பாரதமாதா பிக்ஸர்ஸ்

# பழநி

இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
திரைக்கதை - டைரக்ஷன் பீம்சிங்.

**மகாத்மா தியேட்டர்**
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
[illegible]
**பூமாலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாமில் அமெரிக்க ராணுவக்கொள்கை மாருது"

வாஷிங்டன், ஆகஸ்ட் 10

**வியட்நாமில் பல விமானங்களை இழந்துவந்தபோதிலும் அங்கு அமெரிக்காவின் ராணுவக் கொள்கை மாருது என ஜனாதிபதி ஜோன்ஸன் கூறினுர்.**

இந்தநிலை எதிர்பார்க்கப் பட்டதுதான் என்றும் ஆனல் எதிர்பார்க்கப்படும் அளவைவிட இந்த நஷ்டங்கள் குறைவென்றும் அவர் தொடர்ந்து கூறினுர்.

ஆனல் வியட்நாம் சமாதானப் பேச்சுக்கு அமெரிக்கா எந்தச் சமயமும், எந்த இடத்திலும் அமரத் தயார் என்ருர் ஜனாதிபதி.

இதற்கிடையில் வியட்நாம் பிரச்னையைத் தீர்க்க ஆசிய மகாநாடு கூட்டப்படவேண்டுமென்ற யோசனையைச் செனட்டர் மான்ஸ்பீல்ட் ஆதரித்திருக்கிருர். இதுசம்பந்தமான ஸ்ரீமதி இந்திரா காந்தியின் யோசனையை அவர் வரவேற்ருர்.

கம்போடியா அருகில் அமெரிக்க விமானத் தாக்குதல் காரணமாக சர்வதேச கண்காணிப்புக் கமிஷன் அங்கத்தினர்கள் தரையில் படுத்து உயிர்தப்பவேண்டி நேரிட்டதென்றும் அமெரிக்கா ஜெனிவா ஒப்பந்தத்தை மீறிவருவது குறித்து அதைக் கண்டிக்குமாறும் போலந்து பிரிட்டனைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

தாய்லந்து, மலேஸியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் ஆசிய மகாநாடு சம்பந்தமான தங்கள் முயற்சியில் சேர்ந்துகொள்ளுமாறு 17 நாடுகளைக் கோரியுள்ளன.

## தமிழ்நாட்டுச் செய்திகள்

### கலப்பட தண்டனை

உணவுப் பொருட்களில் கலப்படம் செய்பவர்களுக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை அளிக்க வகைசெய்யும் சட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.

ஃ ஃ ஃ

### இட்லியும் நடிகரும்

சென்னை ஹோட்டல்களில் இட்லி விலை உயர்த்தப்பட்டதை எதிர்த்து நடிகர் சிவதாணு தலைமையில் 2000 பேர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஃ ஃ ஃ

### 10 பேர் விலகினர்

தமிழரசுக் கழகத்திலிருந்து கா. மு. செரீப் விலக்கப்பட்டதை எதிர்த்து. மதுரை தமிழரசுக் கழகதிலிருந்து 10 பேர் ராஜினாமாச் செய்தார்கள்.

ஃ ஃ ஃ

### மோகன் குமாரமங்கலம்

வலதுசாரிக் கம்யூனிஸ்ட் பிரமுகரான திரு மோகன் குமாரமங்கலம் கட்சிக்குத் தெரிவிக்காமல் தமிழ்நாட்டு அட்வகேட் ஜெனரலாகப் பதவி ஏற்றது குறித்து கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

ஃ ஃ ஃ

### ஒருவர் கைது

அரூர் காளியம்மன் கோவில் மைதானத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குழப்படி செய்ததாக தி மு க வைச் சேர்ந்த குசலன் என்பவர் கைதுசெய்யப்பட்டார்.

ஃ ஃ ஃ

### கம்யூனிஸ்ட் கூட்டம்

தமிழ்நாடு வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் கோவையில் ஆரம்பமாகியது.

ஃ ஃ ஃ

### 12 தொகுதிகள்

11 லட்சத்து 5 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட சென்னை நகரம் அடுத்த பொதுத் தேர்தலில் 12 தொகுதிகளிலிருந்து சட்டசபை அங்கத்தினர்களைத் தெரிவுசெய்யும்.

ஃ ஃ ஃ

### மீண்டும் தலைவர்

தமிழ்நாடு டாக்ஸி தலைவர்கள் சங்கத்திற்கு தி. மு. கழகத்தைச் சேர்ந்த திரு. என். வி. நடராஜன் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஃ ஃ ஃ

### பீடித் தொழிலாளர்

தங்கள் குறைபாடுகளை அரசாங்கம் தீர்த்துவைக்காதது குறித்து 1000 பீடித் தொழிலாளர்கள் தமிழ் நாடு சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள்

ஃ ஃ ஃ

### பதவி ஆசை

மேல்சபை அங்கத்தினராவதற்காகத்தான் திரு. மா, பொ. சிவஞானம் தி. மு. கழகத்துடன் கூட்டுச்சேருகின்ருர் என தமிழரசுக் கழகத்திலிருந்து விலக்கப்பட்ட கா. மு. செரீப் கூறினுர்.

ஃ ஃ ஃ

### கட்டாயம் வரும்

கல்பாக்கம் மின்சார நிலையம் கட்டாயம் அமுலாக்கப்படும் என மந்திரி ராமையா சட்டசபையில் அறிவித்தார்

---

## சிவில் உரிமை மசோதா

வாஷிங்டன், ஆக. 10

சிவில் உரிமை மசோதாவை அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியது. செனட்சபையில் மசோதாவுக்குக் கடும் எதிர்ப்பு இருக்குமெனத் தெரிகிறது.

---

## "வெள்ளையனே வெளியேறு"

புதுடில்லி, ஆக. 10

1942ம் ஆண்டின் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் 24ம் ஆண்டு தினம் நேற்று நாடெங்கும் கொண்டாடப்பட்டது. இந்த இயக்கத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு டில்லியில் ஞாபகச் சின்னம் எழுப்பப்படவேண்டுமென மந்திரி ஜகஜீவன் ராம் கூறியிருக்கிருர்.

---

## கென்னடிமுனையில் ஒத்திவைப்பு

கேப்கென்னடி, ஆக. 10

சந்திரனின் மறுபக்கத்தில் மனிதன் இறங்கும் பகுதியைப் படம்பிடிக்கும்பொருட்டு அமெரிக்கா அனுப்பவிருந்த விண்வெளிக்கலத்தின் பயணம் ஒத்திவைக்கப்பட்டது எரிபொருள் அளவில் கோளாறு காணப்பட்டதால் நேற்றிரவு திட்டமிட்டபடி அது அனுப்பப்படவில்லை.

---

## ரூ. 60 லட்சம் நன்கொடை

பம்பாய், ஆக. 10

காலஞ்சென்ற சாஸ்திரியின் ஞாபகார்த்தம் அமைக்கும் நிதிக்காக ரூ 6 லட்சம் நன்கொடை ஸ்ரீமதி லலிதா சாஸ்திரியிடம் அளிக்கப்பட்டது.

# இந்திய நகரில் குழப்பத்தை அடக்க ராணுவம்!

## ஜோர்ஹாட்டில் பொலிசார் மீது தாக்குதல்

### பீகாரில் 1700 பேர் கைது

ஷில்லாங், ஆக. 10

**அஸ்ஸாமிலுள்ள ஜோர்ஹாட்டில் பலாத்காரக் குழப்பங்களை அடுத்து சிவில் அதிகாரிகளுக்கு உதவி செய்யுமுகமாக ராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது.**

நேற்று பிற்பகல் 2 மணி முதல் 72 மணி நேர ஊரடங்கு உத்தரவும், 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஸக்கிம்பூர், ஷிப்ஸாகர் உட்படப் பல நகரங்களில்நேற்றுகொள்ளைகளும், காலித்தனங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

ஜோர்ஹாட்டில் 10,000 க்கு மேற்பட்ட மாணவர்கள் விலைவாசி உயர்வு, உணவு பற்ருக்குறை ஆகியவற்றை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய போது, வெளியார் சிலர், கடைகளைக் கொள்ளையடிக்க முயன்றனர். பொலிசார் மீது அவர்கள் அசிட்குண்டுகளையும், போத்தல்களையும், வீசியதில் 4 பொலிசார் உட்பட பலர் காயமடைந்தனர்

அதே சமயம் பீகாரில் ஐக்கிய எதிர்க்கட்சி முன்னணி கோரியிருந்த 'பந்த்' இயக்கத்துக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்கவில்லை எனக் கூறப்பட்டது. 1700 க்கு மேற்பட்டோர் ராஜ்யம் முழுதும் நேற்று முன்னெச்சரிக்கையாகக்கைது செய்யப்பட்டனர்.

# 'கல்கி' சஞ்சிகையும் இலங்கையரும்

## சென்னை சட்டசபையில் கேள்வி

சென்னை, ஆக. 10

தமிழ் நாட்டில் வெளியாகும் கல்கி சஞ்சிகையில் யில் முகம்மது நபியின்படம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது குறித்து இலங்கையைச் சேர்ந்த ஒ எம். கலீபா என்பவர்தெரிவித்த ஆட்சேபனை சென்னை சட்டசபையில் கிளப்பப்ப்பட்டது.

'கல்கி' ஆசிரியருக்கெதிராக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு இந்த இலங்கையர் கோரியிருந்தது. குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என வினவப்பட்டது

"ஆனல் இது நன்னோக்கத்துடனேயே செய்யப்பட்டது என்றும், ஒரு கதையின் முக்கிய கருத்துக்கேற்ப அது பிரசுரிக்கப்பட்டது என்றும், முஸ்லிம்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்தும் எண்ணம் தமக்குக் கிடையாது என்றும் 'கல்கி' ஆசிரியர் தெரிவித்துள்ளதுடன், இவ்விதச் சம்பவம் மீண்டும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வதாயும் உறுதியளித்திருக்கிருர் எனவே விஷயம் இத்துடன் முடிந்ததாகக் கொள்ளப்பட்டது" என முதல் மந்திரி பக்தவத்சலம் இதற்குப் பதிலளித்தார்.

(பி. டி. ஐ.)

---

## குமாஸ்தாக்களை குறைக்க

சென்னை, ஆக. 10

சிக்கன நடவடிக்கையை முன்னிட்டு ஏழரைச் சதவிகித குமாஸ்தாக்களைக் குறைக்கத் தமிழ்நாடு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

## "கொட்டத்தை அடக்க..."

டாக்கா, ஆக. 10

இந்தியாவின் தந்திரத்தை அடக்க, பாகிஸ்தான் நல்ல தேர்ச்சியுள்ள ராணுவத்தை வைத்திருக்க வேண்டுமென்றும், இந்தியா தனது பிடிவாதத்தைக் கைவிட்டால் இரு நாடுகளின் உறவில் முன்னேற்றம் இருக்காது என்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் இங்கு கூறினுர்.

---

வல்வெட்டித்துறை

## சிதம்பராக் கல்லூரி புதிய ஆய்வுகூடம்

### ராஜாங்க அமைச்சர் திறந்துவைப்பார்?

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வுகூடத்தை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன திறந்துவைப்பார் எனத் தெரியவருகிறது. பருத்தித்துறை எம். பி க. துரைரத்தினம் ராஜாங்க அமைச்சருடன் இதுசம்பந்தமாகத் தொடர்பு கொண்டுள்ளார்.

தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வரும் போதே வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் புதிய கட்டட திறப்புவிழா நடைபெறுமென தெரிகிறது.

## 3000 பேருக்கு வெளியேற்ற உத்தரவு

புதுடில்லி, ஆக. 10

தென்னுபிரிக்காவிலுள்ள ஜொகானிஸ் பார்க்குக் கருகே பேநுனியூ என்றழைக்கப்படும் மாவட்டத்திலுள்ள 50000 இந்தியர்களில் 3000 பேர் அங்கிருந்து வேறிடம் செல்லுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிருர்கள். இந்த இடத்தில் வெள்ளையர்களை குடியமர்த்துவதே இதன் நோக்கம்.

---

## இந்திராவை நாகர் தலைவர் சந்திப்பார்

புதுடில்லி, ஆக. 10

தமக்குச் சுதந்திரமளிக்குமாறு கோரும் நாகர் இனத் தலைவர்கள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை இன்று மூன்ருவது தடவையாகச் சந்திப்பார்.

ஆனல், நாகர்களுக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்டுள்ள கெடுபிடி இப்பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்படுமென்பதற்கு அவ்வளவு நம்பிக்கை இல்லையெனத் தெரிகிறது. (பி. டி. ஐ)

## பிரேஸில் தேனீக்கு ஓய்வே இல்லை!

ரியோ டி' ஜனேரா, ஆக. 10

பிரேஸிலிலுள்ள தேனீக்கள் அதிகவேலை செய்து, களைப்படைந்து இருப்பதுடன் மனத்தில் குழப்பமடைந்தும் இருக்கின்றன என இங்குள்ள விவசாய அமைச்சு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

ஐரோப்பாவிலிருந்துவந்த இந்தேனீக்கள் அந்த வருடத்துக்கு மூன்று மாதமே வேலை செய்தனவென்றும் அவர் தெரிவித்தார்

ஆனல், பிரேஸிலிலோ வருடம் முழுவதும் பூக்கள் மலர்ந்தபடி இருப்பதால், அத்தேனீக்களுக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லையாம்

(பி. டி. ஐ)

## யூகோவில் காமராஜர்

பெல்கிரேட், ஆக 10

இந்திய தேசிய காங்கிரசின் தலைவரான திரு குமாரசுவாமி காமராஜ் மூன்று நாள் விஜயத்தில் இங்கு யூகோஸ்லேவியா வந்து சேர்ந்துள்ளார். கொம்யூனிஸ் தலைமையிலுள்ள மாபெரும் பொதுத்ஸ்தாபனமான யூகோஸ்லேவிய சோஷலிசக் கூட்டின் அழைப்பிலேயே அவர் இங்கு வந்துள்ளார்.

(பி. டி. ஐ)

---

## ஆலய உற்சவங்கள்

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானுறு செல்வச் சந்நிதி, அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோவில் திருவிழாக்கள் இம் மாதம் 16 ம் திகதி ஆரம்பமாகி 29, 30-ம் திகதிகளில் தேர், தீர்த்த உற்சவத்துடன் முடிவடைகின்றன.

# "10 ஆண்டுகளில் அமெரிக்காவைத் தாக்கும்'

**சீனு, தான் உற்பத்திசெய்யும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த முயன்ருல் அது அந்தநாட்டின் தேசியத் தற்கொலையாகவே முடியும் என அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு மக்னிமாரா கூறினுர்.**

பெரும் பணச்செலவில் சீனு அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது என்றும், ஏவுகருவிகளைக் கொண்ட சிறியபடையை அது உருவாக்கலாம் என்றும் அவர் மேலும் கூறினுர்.

"இன்னும் 10 ஆண்டுகளில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அஸ்திரங்களின் மூலம் அமெரிக்கா அல்லது ரஷ்யாவைத் தாக்கும் சாத்தியமான நிலையை சீனு அடையலாம். ஆனல் இப்படி நேருமானல் தற்கொலையிலேயே முடியும்" என்ருர் மக்னமாரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நம்பிக்கையே, கடவுளைக்காட்டும் ஒளிவிளக்கு. நம்பிக்கையே பலவீனரைப் பலசாலியாக்கவும், பயந்தவரைத் தைரியசாலியாக்கவும் வல்லது. முடியாததை முடியும் படியும் செய்யக்கூடியதும் தெய்வநம்பிக்கைதான்.

— சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி 26 (11-8-66)


## பிரதமர் கொண்டுவந்த கங்கை

மகாவலிகங்கையை வடக்கே திருப்பும் திட்டம் இனியும் கனவாக இருக்கமாட்டாதென்றும் விரைவில் நனவாகத் தொடங்கிவிடுமென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவும், காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வாவும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாகத் தெரிவித்துவிட்டனர். இன்னும் சில வருடங்களில் யாழ்ப்பாணம் பாலைவனமாகிவிடுமென்று யாரோ ஒரு நிபுணர் கூறியகருத்தினால் அச்சமடைந்திருந்த மக்களுக்கு, காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொள்ள வந்த பிரதமர் 'கங்கையையும் கொண்டுவருவேன்' என்று அளித்துள்ள உறுதிமொழி பல நாள் பட்டினி கிடந்தவனுக்கு அறுசுவையுடன் உணவளித்தது போன்றுள்ளது.

மகாவலிகங்கையை வடக்கே திருப்பவேண்டுமென்ற யோசனையை முதலில், பல வருடங்களுக்குமுன், முன்னாள் சட்டசபை அங்கத்தவர் காலஞ்சென்ற திரு. பாலசிங்கம் யோசனை தெரிவித்திருந்தபொழுது 'அவருக்கு மூளை சரியில்லை' என எள்ளிநகையாடப்பட்டது. காலம் மாறி, உலகநாடுகள் பலவற்றில் பெரிய பெரிய ஆறுகளும் நதிகளும் திசைதிருப்பிவிடப்பட்டதும் அண்டைநாடான இந்தியாவில் பாக்ரா நங்கல் என்ற பெரிய அணைக்கட்டுத்திட்டமும் ஐக்கிய அரபுக் குடியரசில் அஸ்வான் அணைத்திட்டமும் உருவானதும் மகாவலிகங்கையை வடக்கே திருப்புவது நடக்கமுடியாத விஷயமல்ல என்ற துணிச்சலை ஏற்படுத்தியது. மகாவலிகங்கையை வடக்கே திருப்பவேண்டுமென்ற கோரிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. இதைச்சுலபமாகத் திருப்புவதற்கான யோசனைகளும் தெரிவிக்கப்பட்டன. வெளிநாட்டு நிபுணர்கள், ஐ. நா. நிபுணர்களும் இத்திட்டம் பற்றி ஆராய்ந்து அறிக்கையும் சமர்ப்பித்தனர். வடக்கு என்றாலே எதையும் வகுப்புவாதக்கண்ணோட்டத்துடனும் சந்தேகத்துடனும் நோக்கிய முன்னைய அரசாங்கங்கள் மகாவலிகங்கைத் திட்ட யோசனையையும் மூலையில் போட்டிருந்தன.

இன்று தேசிய அரசாங்கம் ஏற்பட்டு தேசிய ஐக்கியம் உருவாகியுள்ளது. தமிழ் பேசும் மக்களும் அரசாங்கத்தில் பங்குகொண்டுள்ளனர். தேசிய ஐக்கியத்தின் மூலமே நாட்டை முன்னேற்றமுடியுமென்பதை நாட்டு மக்கள் அனைவரும் உணர்ந்துவிட்டனர். தேசிய அரசாங்கமும் அதன் பிரதமரும் இதை உணர்த்தி வருகின்றனர்.

உலகஜனத்தொகையும் நம் நாட்டின் ஜனத்தொகையும் அதிகரித்து வருகிறது. ஜனப்பெருக்கத்தின் வேகத்திற்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்காவிட்டால் நாட்டில் பஞ்சமும் பசியும் தான் மிஞ்சும். உணவு உற்பத்தியைப் பெருக்கவும் நாட்டைமுன்னேற்றவும் தேசீய ஐக்கியம் மட்டுமல்ல பாசனவசதிகளும் அவசியம்.

பிரதமர் இங்கு வந்திறங்கியதும் குறிப்பிட்டதுபோல யாழ்ப்பாண விவசாயிகள் உழைப்பாளிகள் உழைப்பைப் பயன் படுத்துவதற்கு வசதிகளும் வேண்டும். தென்னிலங்கையில் ஆண்டு தோறும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் பெருமளவில் ஏற்படுவதுண்டு. இவை தவிர வெள்ளத்தினால் வீடு வாசல்களை இழப்பவர்களுக்கு உணவு மற்றும் உதவிகளை அளிக்கவும் அரசாங்கம் பணம் செலவிடவேண்டியேற்படுகிறது. வெள்ளச்சேதம் ஒருபுறமிருக்க மகாவலிகங்கை நீரில் பெரும்பகுதி எவருக்கும் பயன்படாமல் கடலில் போய்ச்சேர்கின்றது.

வரண்ட பிரதேசங்களான வடமத்திய மாகாணத்துக்கும் வடக்கு மாகாணத்துக்கும் மகாவலிகங்கையைத் திசைதிருப்பி விடுவதன்மூலம் தென்னிலங்கையில் வருடாவருடம் வெள்ளத்தினால் ஏற்படும் கஷ்டநஷ்டம் குறையும்; உணவுச் செய்கைக்குப் பயன்படவேண்டிய நீர், கடலில் சேர்ந்து உப்புநீராகி உபயோகமில்லாது போவது நிற்கும்; வரண்டபிரதேசங்களில் தரிசாகக் கிடக்கும் நிலங்கள் நன்செய், புன்செய் நிலங்களாக மாறி உணவு உற்பத்தி பெருகும்; உணவுக்காக வெளிநாடுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலை நீங்குவதுடன் வெளிநாடு செல்லும் பெருந்தொகைப் பணம் மிஞ்சும்; வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்; மொத்தத்தில் நாடு செழிக்கும்; மக்கள் திருப்தியுடன் வாழ வழிபிறக்கும்.

மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதற்கு வெளிநாட்டு உதவி கிடைக்குமென்றும் வடமத்திய மாகாணத்தினூடாக வடக்கின் தொண்டமானாறு நன்னீர்த் திட்டத்துடன் மகாவலி கங்கை நீர் விரைவில் வந்து கலந்துவிடுமென்றும் பிரதமரும் காணிமந்திரியும் உறுதியாகத் தெரிவித்தனர். இந்த நன்னாளை எதிர்பார்த்து தமிழ்பேசும் மக்கள் தங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும்பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு அளிக்கவேண்டும்.

## வெளிநாடு செல்வார்

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறைப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திரு. ஏ. வி. ஜீவநாயகம் சுகாதாரதுறை சம்பந்தமான உயர்கல்வி கற்பதற்காக உபகாரச் சம்பளம்பெற்று கனடாவுக்கு இம்மாதம் 17-ம் திகதி செல்லவிருக்கிறார்.

# கல்விச் சீர்திருத்தம் பற்றி கலந்தாலோசனைக் கூட்டம்

## யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைத் தேசிய கல்விச் சங்கத்தின் வடபகுதிக் கிளையினால் கல்விச் சீர்திருத்தம் பற்றிய கலந்தாலோசனைக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக் கூட்டம் டக்டார் டபிள்யூ. எல். ஜெயசிங்கம் தலைமையில் சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அக்கூட்டத்தில் இலங்கைப் பல்கலைக் கழக ஓய்வுபெற்ற விரிவுரையாளர் திரு கே நேசையா பங்கு பற்றிப் பேசியதாவது:

"உலக யுத்தங்களுக்குப் பிறகு எல்லாத்துறைகளிலும் முன்னேற்றமும், அபிவிருத்தியும், சந்தர்ப்பமும் அதிகமாக வேண்டுமென்ற கோரிக்கை ஏற்பட்டது கல்வித்துறையிலும் அதிக மக்களுக்கு அதிக கல்வி என்ற கோரிக்கை இடம் பெற்றது ஜனப்பெருக்கம் இதன் ஓர் அம்சமாகும் பள்ளிக்கூடம் செல்லும் வயதினரின் ஜனத்தொகை அதிகரிப்பது மட்டுமன்றி அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளின் நாட்டுமக்களின் ஜனத்தொகையினின்றும் இப்பள்ளிக்கூடம் செல்லும் வயதினரின் ஜனத்தொகைப் பெருக்கம் அதிகமாகவிருக்கிறது. அதிக கல்வி வேண்டுமென்ற கோரிக்கைக்கு அறிவு வளர்ச்சியும் காரணமாகும்.

மனித இனத்துக்குக் கிடைத்துள்ள விஞ்ஞான அறிவில் மூன்றில் இரண்டு பங்கும் இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின்னரே கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இன்றையஉலகில் தமது பங்கினை ஆற்றக் கல்வி தம்மை ஆயத்தப்படுத்த வேண்டுமென்று இளைஞர்களும், வயது வந்தவர்களும் கோருகிறார்கள் முக்கியமாக செயல் ரீதியாகவும் தாம் கற்றுணர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். இக்கோரிக்கைகளுக்கேற்ப சட்டங்களும் இயற்றப்பட்டுவருகின்றன.

ஆறுக்கும் பதினான்குக்குமிடையே உள்ள பிள்ளைகளுக்கு இலவச, கட்டாயக் கல்வி அளிப்பதற்கான சட்டம் வரவேற்கவேண்டியதே ஆனால் 14 வயதுக்கு முன்னர் 8ந் தரத்தில் தேறும் மாணவர்களைப் பெற்றோர் விருப்பத்துக்கிணங்க பள்ளிக்கூடங்களிலிருந்து நிறுத்துவது விரும்பத்தக்கதல்ல மாறாக, 14 வயதுக்குமேலே ஓர்குறிப்பிட்ட வயதுக்குக் கட்டாயக் கல்வியைநாம் கொண்டுசெல்ல வேண்டும்,

பிள்ளையின் சொந்தவீட்டு மொழியை விட்டு பிறிதொரு தாய் மொழியைப் பெற்றோர் தேர்ந்தெடுக்க அனுமதிப்பது ஆகாது நாடு முழுவதும் சம அந்தஸ்துள்ள சிங்கள-தமிழ்பள்ளிக்கூடங்களை நிறுவ சட்டப்படி அரசாங்கம் கடமைப்பாடுடையதாக இல்லாவிடின், தாய்மொழி மூலம் கல்வி என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

இப்போதைய கல்வித்திட்டங்களிலுள்ள ஓர் பெரிய குறைபாடு என்னவெனில், கட்டாயக்கல்விக்கு அனுசரணையாக மேலும்பள்ளிக்கூடங்களை அரசாங்கம் கட்ட வேண்டிய கடமைப்பாடு எதுவும் இல்லாததேயாகும். பிரதேச வாரியாக உள்ள பெரும் வேறுபாடுகள். இவ்விஷயத்தில் தனக்குரிய பொறுப்பை அரசாங்கம் உணரத் தவறியதின் விளைவாகும்.

தேசியக் கல்வித்திட்டத்தின் பகுதியாக தோட்டப் பள்ளிக்கூடங்களைப் பொறுப்பேற்கத் தவறியது, நாட்டு மக்கள் தொகையில் அமுக்கப்பட்டிருக்கும் பத்தில் ஒரு பங்கினரின் சமகல்விக்குரிய சம அந்தஸ்தை மறுத்ததாகும். தோட்டங்களிலுள்ள பிள்ளைகளில் கணிசமான தொகையினர் ஏற்கெனவே அல்லது விரைவில் இந்நாட்டுப் பிரஜைகளாவரென்ற உண்மையை மனதிற் கொண்டால், பிற்பட்டதும் தரங்குறைந்ததுமானதோர் பள்ளிக்கூடக் கல்விமுறை தேசிய ஒற்றுமை என்ற நிலையிலிருந்தும், நாட்டுக்கு இந்த விருத்தி செய்யப்படாத திறமை எல்லாவற்றினதும் சேவை என்ற நிலையிலிருந்தும், எவ்வளவு தூரம் கற்பனை வளமற்றதென்பதுபுலனாகும்."

சென். ஜோன் கல்லூரியை சேர்ந்த திரு கே. பரமோதயம் பேசுகையில், கடந்த அரசாங்கம் தேசியக் கல்வி என்றால் கல்வியை அரசாங்கம் பொறுப்பேற்பது தான் என்ற தவறான கருத்தில் சட்டங்களை இயற்றி விட்டது என்றார் தனியார்பள்ளிக்கூடங்களின் உரிமைகள் ஐ நா சாஸனத்தில் கூட அங்கீகரிக்கப் பட்டிருக்கிறதென்றும், கல்விக்கு அவசியம் வேண்டியது பாதுகாப்பும், சுதந்திரமுமுள்ள சூழ்நிலையாகுமென்றும், அத்தகைய சூழ்நிலையிலேயே கல்விக்கு உயிரோட்டமும் முன்னேற்றமும் ஏற்பட முடியுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

'பள்ளிக்கூடமுறை' பற்றி யூனியன் கல்லூரியின் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. ஐ. பி துரைரத்தினமும் ஹாட்லிக்கல்லூரி தலைமை ஆசிரியர் திரு. கே பூரணம் பிள்ளையும் அறிக்கைவாசித்தார்கள்.

இக்கூட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி உதவி அதிபர் திரு. எம். பேராயிரவரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஏ என். கனகரத்தினமும் பங்குபற்றிப்பேசினர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

தமிழில் மொழிபெயர்க்க முன்வந்தாராம் இங்கிருந்த ஓர் அறிஞர் அக்காலத்திலே ஒலிபெருக்கிகள் கிடையா. மொழிபெயர்ப்பாளர் உரத்துக் கத்தவேண்டும். மகாத்மா உடல்நலமின்மையால் மெதுவாகத்தான் பேசுவார். அந்த அறிஞர் இரண்டொரு சொல்லை மொழிபெயர்த்ததும், மகாத்மா நிறுத்தச்சொல்லி, ராஜாஜியையே மொழிபெயர்க்குமாறு கேட்டாராம். இதைப்பற்றி அந்த அன்பர் தப்பாக நினைக்கப்படாதென்றும், தமது உள்ளம் ராஜாஜிக்கே சரியாகத் தெரியுமாதலாலும், தாம் அடுத்தபடியாகப் பேசப்போவதை அவர் அறிவாரென்றும், ஆதலால் அவரையே மொழிபெயர்க்குமாறு கேட்டதாகவும் விளக்கம் கூறினாராம் மகாத்மா. இதை நேரில் பார்த்த அம்பிகைபாகன் அவர்கள் சொன்னார்.

இதிலிருந்து மொழிபெயர்ப்பவருக்குப் பேசுபவரது உள்ளமும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டுமென்றாகிறதல்லவா?

ஃ ஃ ஃ

இலையால் அன்பால்
ஏத்தும் அவர்க்கு,
நிலையா வாழ்வை
நீத்தர் இடமாம்,
தலையால் தாழும்
தவத்தோர்க்கென்றும்,
தொலையாச் செல்வச்
சோற்றுத் துறையே
—ஸ்ரீசுந்தரமூர்த்தி
சுவாமிகள்

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணம் முற்ற வெளியிலே முந்தாநாள் நடந்த கூட்டத்தைப் பற்றித்தான் ஊரெல்லாம் பேச்சு. அந்தமாதிரி ஒரு பெரிய கூட்டத்தை இங்கு ஜன் மத்திலும் கண்டதில்லை என்று காலையில் வந்த ஓய்வு பெற்ற அன்பர் ஒருவர் சொன்னார்.

அக்கூட்டத்தில் பிரதமர் முதலில் நகைக்சுவை ததும்பப் பேசினார். "சில வருடங்களுக்கு முன்பாக நான் விவசாய மந்திரியாக இருந்தகும் போது யாழ்ப்பாணம் வந்தேன். பெரிய கூட்டத்தைக் கண்டதும் மகிழ்ச்சியுமடைந்தேன் ஆனால் பின்னர் விசாரித்ததில், அவ்வளவு கூட்டம் வந்தது என்னைப் பார்க்க அல்லவென்றும், அங்கு வந்திருந்த யானையைப் பார்க்கத்தான் என்றும் அறிந்து ஏமாற்றமடைந்தேன். ஆனால் இன்று கூடியுள்ள கூட்டமோ அதைவிடப் பன்மடங்கு பெரிது இங்குபல யானைகள் வந்திருக்கின்றனவோ, அல்லது நானே ஒரு யானையாகி விட்டேனோ என்று நினைத்தேன். அப்படி ஒன்றுமில்லை. வயது எனக்கு அதிகமாகிவிடவில்லை. ஒருக்கால் இனி யானைபோல் வளர்ந்து விடுவேனோ என்னவோ" என்றார்.

ஃ ஃ ஃ

தமிழ் மக்கள் இவ்வளவு அமோகமாக ஊர்வலத்தில் பிரதமரை வரவேற்ற காட்சியைக் கண்ட ஒரு சிங்கள அன்பர் மிக மகிழ்ச்சி அடைந்து, இவ்வளவு அன்பைப் பெற்ற பிரதமர், தமிழருக்கு மாறாக எதுவும் செய்ய இனி எப்படி நினைக்கவும் முடியும்? என்று கேட்டு, "அவர் எங்களுக்கு மட்டுமல்ல தமிழருக்கும் பிரதமர் தானே" என்றார்.

உதவி மந்திரி பிரேமதாஸா கொழும்பிலிருந்து இக் கூட்டத்துக்குப் புறப்படுகையில் 1958-ம் வருட சம்பவங்களை நினைத்துக் கொண்டாராம். "இந்தப் பக்கம் வரவே மனம் துணியவில்லை. ஆனால் அந்த ஆட்சியைக் கவிழ்த்த ஒரே ஒரு காரணத்தை நினைத்துக் கொண்டே இங்கு வரத் துணிவு ஏற்பட்டது" என்று பொருள்படும்படி பலத்த கரகோஷத்துக்கிடையே கூறினார்.

"தமிழருடன் சேர்ந்து தேசிய அரசங்கம் அமைத்தது குறித்து சில எதிர்க்கட்சியினர், இந்த அரசாங்கத்தை, 'நல்லெண்ணெய்' என்றும், மசாலவடை, ஆமவடை, உளுந்துவடை, தோசை என்றெல்லாம் வசைபாடுகிறார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். அவர்களது ஆட்சி நெருப்புத் தண்ணீராக இருந்தது. அதைவிட, நல்லெண்ணெய் எவ்வளவோ மேலல்லவா?" என்று பிரேமதாஸ கூறிய போது, கரகோஷமும் சிரிப்பும் எழுந்தது.

ஃ ஃ ஃ

அவரது உணர்ச்சிமிக்க சிங்கள பிரசங்கத்தை, அதே உணர்ச்சி வேகத்துடன் வவனியா "சிங்கம்" தமிழில் மொழி பெயர்த்ததைக் கேட்டுப்பலரும் வியந்தனர். உடனுக்குடன் மொழி பெயர்த்ததைக்கேட்டுப் பலரும் வியந்தனர் உடனுக்குடன் மொழிபெயர்ப்பதென்பது மிகக்கடினமான வேலை. இருமொழிகளிலும் புலமை பெற்றவர்களுக்கும் ஒரு சொல் தட்டிப்போனால் மிகச் சங்கடம்.

மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்து ஆங்கிலத்தில் பேசும்போது, அதைத்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு வருடம்!

## தபால்அட்டையின் பிரயாணம்

யாழ்ப்பாணம், வியா. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள கோயில் வீதியிலிருக்கும் திரு. எம் ஆர். தம்பையா என்பவருக்குப் போடப்பட்ட தபாலட்டை உரியவரிடம் வந்து சேர இரு வருடங்கள் தேவைப்பட்டிருக்கிறது!

1964ம் ஆண்டு ஆவணி 17ல்போடப்பட்ட அத்தபாலட்டை சிலதினங்களுக்கு முன்னர்தான் விலாசதாரரை அடைந்திருக்கிறது. தபாற் பகுதியினரால் இரு முத்திரைகள் அடிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றில் 1964ம் ஆண்டு என்று ஒரு முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது. பக்கத்து முத்திரையில் 1966ம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தபாலட்டையைக் கொழும்பிலிருந்து விலாசதாரருக்கு அவரது மகன் எழுதியிருந்தார். பாவம்! இந்த தபாலட்டை எங்கெங்கு என்னென்ன பாடுபட்டதோ?

# 'புதிய கல்வித்திட்டம் நல்ல அம்சங்களை கொண்டிருக்கின்றது"

களுவாஞ்சிக்குடி, புதன் "எமது நாட்டிலிருந்து வந்த கல்வித்திட்டங்களை மாற்றி இனி ஓர் புதிய கல்வித்திட்டத்தை அரசாங்கம் கூடிய விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறது".

களுதாவளை மகாவித்தியாலய பெற்றோர் தின விழாவில் பேசிய, பட்டிருப்பு எம் பி திரு சி.மூ. இராசமாணிக்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:—

இக் கல்வித்திட்டத்தினால் பொருளாதார அபிவிருத்தி அடைவதற்கு ஏதுவாக அமைவதாகவும் பல தொழில்களைப் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைப்பதாகவும் இருக்கும் அப்படிநடைமுறையில் வரும் கல்வித்திட்டத்தில் உங்கள் பாடசாலையும் ஓர் சிறந்த இடத்தை அடையக்கூடியதொரு சந்தர்ப்பம் ஏற்படும்.

பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கிழக்குப் பிராந்திய உதவி வித்தியாதிபதி திரு. எல். ஆர். பெரேரா பேசுகையில் கூறியதாவது:—

"உங்கள் மாணவர்கள் காட்டிய திறமைகள் பயன் பெறவேண்டுமானால் அவர்களுக்கு சிறந்த கல்விபுகட்ட வேண்டும் சிறந்த கல்வித்திட்டத்தின்படி இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்கி, பொருளாதார அபிவிருத்தி அடையச் செய்யும் இப்புதிய கல்வித் திட்டத்தின்படி பாடசாலைகளுக்கு பல திறமையான ஆசிரியர்களும் பல கருவிகளும் கிடைக்கும்.

மற்றும் பலரும் பேசினர்.




## கொழும்பு

**வியாழன் 11-8-66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**314 மீட்டர்&41 மீட்டர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 இசை மெட்டு

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 இசைக்கச்சேரி, 7-00 பேச்சு, 7-30 நாடகம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நிலையஒலிப்பதிவுகள்.

# தற்கொலை

## மனக் கசப்பே காரணமாம்

களுவாஞ்சிக்குடி, புதன் களுகாமத்தைச் சேர்ந்த த. க. விநாயகம் என்பவர் வாழ்க்கையில் ஏற்பட்ட மனக்கசப்பினால் நச்சுத் திராகவம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஞானமுத்து நடாத்திய மரணவிசாரணையின் போதே மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

19வயது மாணவன் சினித்தம்பி சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவர் அடிக்கடி பணம் வாங்கி தேவையற்ற விதத்தில் செலவுசெய்து வந்தாரென்றும், அவரது வாழ்க்கையில் ஏற்பட ஒரு மனக்கசப்பே தற்கொலைக்குக் காரணமாக இருக்குமென்றும் தெரிவித்தார்.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## ஹர்த்தால் ஞாபகக்கூட்டம்

யாழ்ப்பாணம், வியா. 1953 ஹர்த்தால் ஞாபகக்கூட்டம் இம்மாதம் 15-ம் தேதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். கோட்டை மைதானத்தில் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் பெர்னாட் சொய்சா, ரி பி சுபசிங்கா, மற்றும் திருவாளர்கள் வி. ஏ. சமரவிக்கிரமா, பி. நாகலிங்கம், வி. பாலசிங்கம், ஐ. ஆர். அரியரத்தினம், எஸ். நடராசா ஏ. விசுவநாதன், எம் துரைராசா, எம். சி. சுப்பிரமணியம். டொமினிக்ஜீவா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

## கடைகளில் திடீர் சோதனை

உடுப்பிட்டி, புதன் நெல்லியடியிலுள்ள சில கடைகளை நேற்றும், நேற்று முன்தினமும், பருத்தித்துறைப் பொலிசார் திடீர் சோதனை செய்தனர். சட்டவிரோதமாகச் சாராயம் விற்றார்கள் என்ற சந்தேகத்தின்பேரிலேயேஇச்சோதனைகள் நடத்தப்பட்டன. [illegible] வாயிலும் இத்திடீர்ச்சோதனைகள் நடைபெற்றன.

<u>பிரதமருக்கு</u>

# விலகியவர்கள் அளித்த வரவேற்பு

யாழ்ப்பாணம், வியா. சிங்களத் தேர்ச்சிச் சட்டத்தினால் பதவியிலிருந்து விலகிக்கொண்ட அரசாங்க ஊழியர்கள் நாச்சிமார் கோயிலடியில் பிரதமருக்கு நேற்றுமுன்தினம் தமது குடும்பத்தினருடன் சேர்ந்து ஒரு வரவேற்பை அளித்தனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலின் கீழ்வைத்து, பிரதமரிடம் அவர்கள் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர்.

தமக்கு அரசாங்கத்திலோ அன்றி கூட்டு ஸ்தாபனங்களிலோ நியமனம் வழங்கும்படியும், விரும்பாதவர்களுக்கு அவர்களது சேவைக் காலத்துடன் 5 வருடங்கள் கூட்டி பென்சன் உரிமை பெற வசதியளிக்கும்படியும் அவர்கள் பிரதமரைக் கேட்டுக்கொண்டனர்.

அரசாங்க ஊழியர்கள் பிரச்னை பற்றித் தமக்குத் தெரியுமென்றும் ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதமர் அவர்களுக்கு தெரிவித்தார்.

## கதிர்காமம் சென்றவரை காணவில்லை

உடுப்பிட்டி, புதன் கதிர்காமத்துக்குச்சென்ற கரணவாய் தெற்கைச் சேர்ந்த திருமதி. இளையதம்பி சின்னாச்சி வயது(60) என்பவரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது இவர்தனியாகவே கதிர்காமம் சென்றார் எனவும், கதிர்காமத்தில் இவருடைய பொருட்கள் திருட்டுப்போய் விட்டனவென்றும் கதிர்காமம் சென்றுதிரும்பிய இப்பகுதியைச்சேர்ந்த சிலர் தெரிவித்தனர். இது சம்பந்தமாக மாந்தறைப் பொலிஸிலும், பருத்தித்துறைப் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 8000 யாத்திரீகர்களுக்கு வைத்திய வசதி

கதிர்காமம், புதன் கதிர்காமத் திருவிழாவின் போது, சௌக்கிய தான இலவச வைத்திய உதவி இயக்கம் 8000-க்கும் அதிகமான யாத்திரீகர்களுக்கு வைத்திய உதவிகள் அளித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூர் சுதந்திரக் கொண்டாட்டம்

சிங்கப்பூர், ஆக, 10 சிங்கப்பூரின் முதலாவது சுதந்திர வருடாந்தக் கொண்டாட்டத்தில் இராணுவத் துருப்புக்களுடன் இந்திய, சீன, மலாய சிறுவர், சிறுமியரின் அணிவகுப்பும் நடைபெற்றது. சிங்கப்பூரின் பல இனக் கொள்கையை இவ்வணிவகுப்பு மேலும் எடுத்துக் காட்டியது. (பி. டி. ஸி)

## கலை கைப்பணிக் காட்சி

யாழ்ப்பாணம், வியா நல்லூர்- கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைகளின் கலை கைப்பணிக் காட்சி நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா கலை கைப்பணிக் காட்சியைத் திறந்துவைத்தார். நேற்று ஆரம்பமான இக் காட்சி நாளைவரை நடைபெறும்.

# "முதல்எதிரி என்னைச் சுட்டதும் நான் நிலத்தில் விழுந்தேன்"

## கொலை முயற்சி வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, புதன் "முதலாம் எதிரியாகிய ஆழ்வான் சுப்பன் என்னை நோக்கி துப்பாக்கியினால் வெடிவைத்தார். வெடியின் குண்டுகள் என் கண்ணிலும் நெஞ்சிலும், வயிற்றிலும் பாய்ந்தன. உடனே கையால் கண்ணைப் பொத்திக் கொண்டு குளறியபடி நிலத்தில் விழுந்தேன்."

புலோலி தெற்கு குரும்பசிட்டி கொலைமுயற்சி வழக்கு விசாரணையில் பரஞ்சோதி துரைராசா சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. றூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

துரைராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

நான் புலோலி தெற்கில் வசிக்கிறேன். ஆழ்வான் சுப்பன், ஆழ்வான் செல்வன், சின்னவன் இரத்தினம், ஆறுமுகம்துரைராசா ஆகிய நான்கு எதிரிகளையும் எனது 14 வயதிலிருந்து தெரியும். பெயர்களும் தெரியும். முதலாம் எதிரியின் அண்ணன் இரண்டாம் எதிரி, சம்பவதினத்தன்று குரும்பசிட்டி சனசமூக நிலைய முன்புறத்தில் நான் கதைத்துக் கொண்டு நின்றேன். வேலுப்பிள்ளை பொன்னையா கணபதிப்பிள்ளைதங் ராசா, குருகுப்பிள்ளை இராமகிருஷ்ணன் ஆகியோரும் நின்றனர். எதிரிகள் நால்வரும் சனசமூக நிலையத்தை நோக்கி ஒவ்வொரு ஆயுதங்களுடன் வந்தார்கள். முதலாம் எதிரி உடனே என்னை நோக்கி வெடிவைத்தார். அதன்பின் ஒவ்வொன்றாக மூன்று வெடிச்சத்தம் கேட்டது. எனக்குச் சூடுபட்டதும் குளறிக்கொண்டு நிலத்தில் விழுந்தேன் அதன் பின்னர் கணபதிப்பிள்ளை வீட்டிற்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு நடராசாவின் காரில் சென்றேன் எனது இடதுகண்ணில் குண்டுபட்டதால் இப்போது பார்வையில்லை. மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

மேல்விசாரணையை இம்மாதம் 21-ந் திகதிக்கு மாஜிஸ்திரேட் ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்கள் திரு கே இரத்தினசிங்கம், திரு. நடராசா ஆகியோரின் உதவியுடன் அட்வகேற் திரு சத்துருகுலசிங்கம், திரு ரி. கணேசலிங்கம் ஆஜரானார்கள். வழக்காளி சார்பில் வழக்கறிஞர்கள் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம், திரு. ம வேலும்மயிலும் அட்வக்கேற் திரு. எஸ் சண்முகநாதன் உதவியுடன் காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி ஆஜரானார்.

# மீன்பிடிக்கச் சென்றவர் இறந்து கிடந்தார்

யாழ்ப்பாணம், வியா. பொழுது போக்குககாக மீன்பிடிககச்சென்ற ஒருவர் இரு தினங்களின் பின்னர் கடற்கரையில் இறந்து கிடந்த சம்பவம் காக்கைதீவில் நிகழ்ந்துள்ளது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தியோ ஞானம் என்பவர் மீன்பிடிக்கக் காக்கைதீவுக்குச் சென்றார் என்றும் இருதினங்களுக்குப் பின்னர் காக்கைதீவுக்கடற்கரையில் அவர் இறந்து கிடக்கக்காணப்பட்டார் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணையின் போது கபிரியல் என்பவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது: 'மீன்பிடிப்பதற்காகக் காலையில் சென்றவர் மாலையும் வீடு திரும்பாதது கண்டு நாங்கள் பல இடங்களிலும் தேடினோம். ஆனைக்கோட்டை பொலிசாரிடமும் முறையிட்டோம். அடுத்தநாட்காலையும் தேடினோம். இரு தினங்களின் பின்னர் காக்கைதீவுக் கடற்கரையில் பிரேதம் ஒன்று ஒதுங்கிக் கிடப்பதாக சிலர் தெரிவித்ததைத் தொடர்ந்து அங்கு சென்று பார்த்தபொழுது தியோஞானம் இறந்துகிடக்கக் காணப்பட்டார் இறந்தவர் திருமணமானவர். ஆனால் மனைவி இல்லை குழந்தைகளுமில்லை.'

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் கனகரத்தினம் விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

# கிணற்றில் தவறிவிழுந்துமரணம்

யாழ்ப்பாணம், வியா. டாக்டரின் ஆலோசனைக்கு மாறாக ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒருவர், சில மணி நேரத்துக்குள்ளாகவே காலமான சம்பவம் இங்கு நிகழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுவீதியைச்சேர்ந்த அம்மாசிமனைவி சுப்பம்மா என்பவர் மரணச்சடங்கொன்றில் கலந்துவிட்டு வீடுதிரும்பி குளித்துக்கொண்டிருக்கையில் கிணற்றில் தவறிவிழுந்தார் என்றும் அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் வீட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்ட தினமன்று மரணமானார் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் ரி. பரமேஸ்வரன் கழுத்து முறிந்ததினால் மரணமேற்பட்டது என்று கூறினார்.

மூன்றுநாட்கள் வரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றஇவரை நான்காவதுதினம் டாக்டரின் ஆலோசனையையும் மீறி உறவினர்கள் வீட்டிற்கு அழைத்துச்சென்றதாகவிசாரணையின்போது டாக்டர் தெரிவித்தார்.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் விபத்தினால் ஏற்பட்ட மரணமென்று தீர்ப்பளித்தார்.

<u>அமெரிக்காவுக்கு</u>

## 40 கோடி டாலர் நஷ்டம்

வாஷிங்டன், ஆக, 10 இந்தியா ரூபாய் மதிப்பைக் குறைத்ததால் அமெரிக்காவுக்கு 40 கோடிடாலர் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் கையிருப்பிலிருந்த இந்திய ரூபாய் காரணமாக இந்தநஷ்டம் ஏற்பட்டதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோன் யங், மைக்கேல் கொலின்ஸ் ஆகிய இரு வீரர்களுடன் அனுப்பப்பட்ட அமெரிக்க வானவெளிக் கப்பல் ''ஜெமினி 10'', ஏற்கனவே அனுப்பப்பட்ட மற்ருேர் ராக்கட்டுடன் இணையும் பொருட்டு அதைத் துரத்திச் செல்வதை இங்கு காணலாம்.

# விந்தைகள் புரியும் தெள்ளுப் பூச்சிகள்

## இவைகளுக்குத் தெரிந்தமொழி பிரெஞ்சு!

உலகிலேயே மிகவும் விந்தையான சர்க்கஸ் கூம்பெனி மேற்கு ஜெர்மனியில் இருக்கிறது. இந்த சர்க்கஸ் கலைஞர்களின் விசித்திரமான விளையாட்டுக்களைப் பார்ப்போர், பரவசமடைகிருர்கள். சமீபத்தில் 16 நாட்கள் தொடர்ந்தாற்போல சர்க்கஸ் நடந்தபோது, களைப்பு காரணமாக 12 கலைஞர்கள் மரணமடைந்தார்கள். இந்த சர்க்கஸ் கலைஞர்கள் வேறு யாருமல்ல; தெள்ளுப் பூச்சிகளே 'ஆறு மாதம்' ஆன தெள்ளுப் பூச்சிகளுக்கு மூன்று மாதப் பயிற்சி அளித்து சர்க்கஸ் வித்தைகள் செய்ய தயார் செய்கிருர் ஒரு விந்தை மனிதர்.

மூனிச் நகரில் 'நுடோர்பே' என்பவர் விசித்திரமான சர்க்கஸ் ஒன்றை நடத்திவருகிருர். தென் ஜெர்மன் விழாவின்போது இந்த நவீன சர்க்கஸ் குழுவைச்சேர்ந்த 45 கலைஞர்கள், பயிர்ச்செறியுப் பலவித அற்புத வித்தைகளைச் செய்து காண்பித்தார்கள். மயிரிழைக் கனமுள்ள கம்பி மீது கவனமாக நடந்தும், தாவிக் குதித்தும் இக்கலைஞர்கள் நடத்திய வித்தைகளைக் கண்டு, ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனல் 16 நாட்கள் இவ்விதம் சர்க்கஸ் வித்தை காட்டிய கலைஞர்களில் 12 பேர் கடைசியில் களைப்பு காரணமாக உயிரிழந்தார்கள்.

''தெள்ளுப் பூச்சிகள் எதற்கு?''— சர்க்கஸ் வித்தைசெய்யும் கலைஞர்கள், தெள்ளுப் பூச்சிகளே!

உலகிலேயே 'தெள்ளுப் பூச்சி சர்க்கஸ்', இது ஒன்றுதான். இந்த சர்க்கஸுக்கு போட்டியே கிடையாது. 50 ஆண்டுகளுக்கு முன்பே, இந்த சர்க்கஸ் கம்பெனியை நுடோர்பே ஆரம்பித்தார். ஒவ்வொரு விழாவின்போதும் இவரது சர்க்கஸ் கூடாரத்தைக் காணலாம். ஆனல் 'டிடிடி' கிருமி நாசினி மருந்து கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், இவரது தொழிலுக்கு ஆபத்து தோன்றியது. எனினும் விடா முயற்சியாக இவர் 'தெள்ளுப்பூச்சி சர்க்கஸ்' காட்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிருர்.

இந்த 'தெள்ளுப்பூச்சிகளுக்கு' பிரெஞ்சு மொழிதான் புரியும். உருவாகி ஆறு மாதமேயான தெள்ளுப் பூச்சிகளைப்பிடித்து சுமார் 3 மாதகாலம் தீவிரப் பயிற்சி அளிக்கிருர். சர்க்கஸ் வேலைக்கு பெண் பூச்சிகளே லாயக்கு என்கிருர். இந்த அபூர்வமான மனிதர்! உயரத் தாண்டுதல்; சின்னஞ் சிறிய வண்டிகளை இழுத்தல்; மயிரிழை கனமுள்ள தங்கக் கம்பியில் கவனமாக நடந்துசெல்லல்; காகிதத் துண்டுகளில் கண்கட்டுவித்தை செய்தல் போன்றவற்றில் பூச்சிகளுக்கு பயிற்சி அளிக்கிருர், திறமையாக வித்தைசெய்த பின்னர், இப்பூச்சிகளின் படுக்கை இடம்; அவரது கோட்டு பாக்கெட்!

முன்பு சர்க்கஸ் வேலை செய்துவந்த நுடோர்பே, 1949 முதல் 'தெள்ளுப்பூச்சி சர்க்கஸ்' நடத்திவருகிருர்! அவரது சட்டைப்பையில்தான் வழக்கமாக கலைஞர்கள் தங்குவார்கள்! இந்த விந்தையான சர்க்கஸ் கலைஞர்கள் இதுவரை 'டெலிவிஷன்' காட்சியில் தோன்றியதில்லை டெலிவிஷன் திரையில் தோன்றினல், பார்ப்போரின் கண்களுக்குத் தெரியாதே!

# புருப் புராணம்

அதி வேகமாகப் பறக்கும் பறவைகளில் புருதான் முதன்மைத் தானம் வகிக்கிறது முன்பெல்லாம் நம் நாட்டில் புருக்களைக் கொண்டு பந்தயம் நடத்துவர். அவை ஆயிரக்கணக்கான மைல் தூரம் வானில் பறந்து சென்று பறக்கவிட்ட இடத்திற்கே திரும்ப வந்து சேர்ந்து விடும் புரு சற்றேக்குறைய பதினேழு மணி நேரம் விடாது பறக்கும். அதாவது இடையே நீர் உணவு, ஓய்வு எதுவும் இன்றி ஒரே மூச்சில் அவ்வளவு நேரம் பறக்கும். இவ்வளவு வலிவும், புருக்களுக்கு ஏற்பட சாதாரணமாக தானியங்களைப் போட்டு வளர்த்தாலே போதும். இன்னும் இவற்றிற்கு பிரத்யோகமான முறையில் உணவு ஊட்டி வளர்த்தால், இன்னும் வேகமாகவும் நீண்ட நேரமும் பறக்கும் புருக்கள் சராசரி மணிக்கு 40 மைல் வேகம் பறக்கும். இவற்றின் அதிக பட்ச வேகம் மணிக்கு 70 மைல். அனேகமாக புருக்கள் சூரிய உதயத்திற்கு முந்து சென்று ... ஸ்தமன வேளைக்குள்

புறப்பட்ட இடத்திற்குவந்து சேரும். பல நாடுகளில் புரு வளர்ப்பவர்கள் பந்தயம் நடத்துகின்றனர். நம் தமிழகத்திலும், ''புருப்பந்தயம்'' என்று தனிப்பட்ட முறையில் பந்தயம் நடத்தாவிடினும் வலுவுள்ள புருக்களை பறக்கவிட்டு இளைத்த புருக்களை வீழ்த்தச் செய்கின்றனர். அதோடல்லாமல் பெண் புருக்களை ஏவி ஆண் புருக்கள் பலவற்றைக் கூட்டி வரச் செய்கின்றனர். புருக்கள் தொன்றுதட்டு 'தபால்காரனுக' பணியாற்றி வந்திருக்கின்றன. புருக்களின் கால்களில் கடிதங்களைக் கட்டிப் பறக்க விட்டால், கடிதம் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குச் சரியாகப் போய்ச் சேரும். அவ்வளவு கச்சிதமாகப் பழக்கி வைத்திருப்பர்.

—த்தா

## வேலை கிடைப்பதற்கு வழி!

கிராமவாசிகளுக்கு வேலை தேடிக் கொடுப்பதற்கான வழி, அவர்கள் இதுவரையில் செய்துவந்திருக்கும் கைத்தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பதேயன்றித் தொழில்களை இயந்திரமயமாக்கிவிடுவதல்ல. கிராமவாசிகள் தங்கள் குடிசைகளிலேயே பொருள்களைத் தயாரித்தாலும், அவற்றை ஓரிடத்தில் திரட்டி லாபத்தைப் பகிர்ந்துகொள்ள முடியும். திட்டப்படி மேற்பார்வையின்கீழ் கிராமவாசிகள் வேலை செய்வார்கள். பொது இருப்பிலிருந்து மூலப்பொருள்களை விநியோகிக்கலாம். கூட்டு முயற்சி எண்ணம் உண்டாகும்படி மாத்திரம் செய்துவிட்டால் கூட்டுறவிற்கும், இன்னின்னர் இன்னின்ன வேலையைச் செய்வது என்று பகிர்ந்துகொள்வதற்கும், காலம் வீணுகாமலிருப்பதற்கும், வேலை திறமையாக நடப்பதற்கும் நிச்சயமாக அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

—மகாத்மாகாந்தி.

## எது ஜனநாயகம்?

அரசியல் நிலையில் ஜனநாயகம் சரிவர இயங்கவில்லையென்ருல், ஏதாவது ஒருவிதமான நிர்ப்பந்தத்தின் மூலமோ வன்முறையின் மூலமோ புரட்சியின் மூலமோதான் மாறுதலைத் தோற்றுவிக்க முடியும். ஆனல் சமாதான முறை இருக்குமிடத்தில், வயதுவந்தோர் வாக்குரிமை இருக்குமிடத்தில், வன்முறையின் மூலம் மாறுதல் தோற்றுவிக்க முயல்வது முற்றிலும் அபத்தமாகும். பெரும்பா

(5-ம் கலம் பார்க்க)

(3ம் கலத் தொடர்ச்சி)

லானவர்களின் கருத்தை நேர்முறையிலே, தக்ககாரணம் காட்டி மாற்ற முயன்று அதில் தோல்வியுற்ற ஒரு சிலர், தங்கள் கருத்தை அவர்கள் மீது வன்முறையின் மூலம் சுமத்தப்பார்க்கிருர்கள் என்றே நான் நினைக்கிறேன். இது ஜனநாயகமல்ல; அரசியல் ஜனநாயகமுமல்ல; பொருளாதார ஜனநாயகமுமல்ல —நேருஜி

# நாடும் நாமும்

# நாம் முன்னேறி-- --உள்ளோமா?

— மு. சிவலிங்கம் —

இன்றைய உலகத்திலே மக்கள் எல்லோரும் முன்னேற்றம் என்ற சொல்லை அடிக்கடி பேசியும் எழுதியும் வருகிருர்கள். நாம் எமது முன்னேரைக்காட்டிலும் எத்தனையோ முன்னேறியிருக்கிறேம் என்று பெருமிதத்தோடு பேசுகிருர்கள். ஆராய்ந்துபார்த்தால், எமது முன்னேரைக் காட்டிலும் உண்மையில் நாம் முன்னேறவில்லை என்பது தெற்றெனத்தெரியும் இன்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னே வாழ்ந்தோரைக் காட்டிலும் நாகரிகமான உடைகளை அணிகிருேம். இப்போது கார், ஆகாயவிமானம், ஹெலிகோப்டர் போன்ற வாகனங்களின் துணையினுல் ஓர் இடத்துக்கு விரைவில் செல்லமுடிகிறது. ஒருகண்டத்திலிருந்து பிறிதொரு கண்டத்துக்குச் சிலமணி நேரத்தில் செல்ல முடிகிறது. மக்களுக்கு வானெலி. டெலிவிஷன் போன்ற கருவிகளின் துணையினுல் தொலைவிலே நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கேட்கும்படியாகவும் காணும்படியாகவும் இருக்கின்றது. இத்தகைய முன்னேற்றம்எல்லாம் புறத்தே ஏற்பட்டவையே; கருவிகளின் படைப்பிலே ஏற்பட்ட மாற்றங்களே எனவே, கருவிகளின்படைப்பிலே ஏற்பட்ட மாற்றத்தை உண்மையான முன்னேற்றம் என்று நாம் கருதமுடியுமா? முடியாது என்று ஆணித்தரமாகக் கூறலாம். மக்களது உள்ளத்திலே ஏற்படும் முன்னேற்றமே உண்மையான முன்னேற்றம். அதுவே மாசற்ற முன்னேற்றம். ''உள்ளத்திலே உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்கிருர் பாரதியார். மனிதனது உள்ளத்திலே உண்மை, நேர்மை போன்ற உள்ளுணர்வுகளுக்கு முதலிடம் கொடுக்க படவேண்டும். இப்பண்புகளைப் போற்றவேண்டும் மனிதனது சிந்தனையிலே நல்லதோர் மாற்றம் ஏற்படுவதையே உண்மையான முன்னேற்றம் என்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். எண்ணங்களால் ஏற்பட்டதே மனிதவாழ்க்கை. எண்ணங்களே செயல்களுக்குக் காரணங்களாக அமைகின்றன, இந்தவகையில் நாம் முன்னேறி இருக்கிருேமா? இல்லை. இப்போது களவு, கொலை முதலிய கொடுமைகள் நடைபெறுகின்றன. நாட்டிலே வறுமைப்பேய் மக்களைப் பீடித்திருக்கிறது, அன்று மக்கள் வறுமையால் அல்லலுற்றனர் என்று சங்கச்செய்யுட்கள் சான்று பகர்கின்றன. இன்று உலகிலே உள்ளமொத்த மக்கள் தொகையில் பாதிப்பேர் பசிக்கொடுமையால் வாடுகின்றனர் மனிதனது உயிருக்கு முன்னரைக்காட்டிலும் பேராபத்து விளைவிக்கக்கூடிய கருவிகள் இப்போதுதான் செய்யப்படுகின்றன. உலகையே ஒரு நொடியில் அழித்து மனித நாகரிகத்தையேபூண்டோடு ஒழிக்கக்கூடிய குண்டுகள் ஆக்கப்படுகின்றன ''உறு பசியும் ஓவாப்பிணியும்செறு பகையும் சேரா இயல்பது நாடு'' என்கிருர் வள்ளுவர். எனவே நாம் அடைந்தது முன்னேற்றமா?

# நூல் நிலையத்தில் நூதனக் கருவி

நெதர்லாந்தில் நூல் நிலயங்களில்கூட தானுக இயங்கும் கருவிகள் வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. நூலகத்திற்கு வருகின்றவர்களுக்கு விரைவில் நூல் கிடைக்க இது பெரிதும் உதவுகிறது.

நூல் நிலயங்களில் கூட தானுக இயங்குகிற கருவிகள் வந்து மனிதர்செய்யும் வேலைகளை மிகவும் எளிதாக்குகின்றனவென்றும் இது மிகவும் குறுகிய காலத்தில், கேட்கும்புத்தகத்தை அளிக்கிறதென்பதும் சற்று வியப்பாக இருக்கலாம். இக்கருவிக்கு'பிபிலியோயோன்' என்று பெயர்.

நூல் நிலயங்களுக்குவருகிறவர்கள்சிலசமயம்பொறுமை இழக்கநேரிடுகிறது. ஏனென்ருல் எங்கோ ஒரு மூலையில் உள்ளநூலைப்பெற நீண்ட நேரம் காத்திருக்கவேண்டும் இந்தத்தொல்லையைஒழிக்க டெல்பிட் டெக்னிக்கல் யூனிவர் சிட்டியில் உள்ள நூல் நிலயத்தில் மிகவும் வேகமாக புத்தகங்கள் கிடைக்க பேராசிரியர்களும் எஞ்ஜினீயர்களும் உதவியுள்ளனர். அவர்கள் நூல்கள் நிறைந்துள்ள இடங்களிலிருந்து காத்திருக்கும் வாசகர்களுக்கு வேகமாக புத்தகங்கள் கிடைக்க தானுக இயங்குகிற எந்திரடெலிவரி முறையை புகுத்தியுள்ளனர். இது ஹாலந்து நாட்டின் தனிச்சிறப்பு மட்டுமல்ல., உலகில் வேறு எங்கும் காணமுடியாத புதுமையுமாகும்.

புத்தகம் எந்த மூலைமுடுக்கில் இருந்தாலும் கூட வாசகர்களுக்கு கிடைத்துவிடும். புத்தகம் கேட்பதற்கும் அது கேட்பவர்களுக்குக் கிடைப்பதற்கும் சராசரி 65 செகண்டுகளே பிடிக்கின்றன; சில விஷயங்களில் ஒரு நிமிட நேரம் கூடப் பிடிக்காது.

ஆனல் இப்புதிய முறையில் வேலைகள் மிகவும் நுணுக்கமானவை. இவைகளில் ஒன்று மின்சார முறை, மற்ருென்று மெக்கானிக்கல் முறை, இவ்விரு முறைகளுமே இதற்குப் பயன்படுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு வாலிப முன்னணி மகாநாடு ஏற்பாடுகள்

## தெல்லிப்பளையிலிருந்து காங்கேசன்துறைக்கு ஜே. ஆர். ஊர்வலமாக அழைத்துவரப்படுவார்

மாவிட்டபுரம், புதன்
இம்மாதம் 21, 22, 23 திகதிகளில் தமிழரசு வாலிப முன்னணியின் வருடாந்த மகாநாட்டை மாவிட்டபுரத்தில் நடத்துவதெனவும் மூன்றும்நாள் பகிரங்கக்கூட்டத்தைக் காங்கேசன்துறையில் நடாத்துவதென்றும் வாலிபமுன்னணியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

8-ந்திகதி காலை மாவிட்டபுரத்தில் ஆரம்பமான செயற்குழுக்கூட்டம் மாலையில் முடிவடைந்தது இச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்பட்ட திரு. செ. இராசதுரை எம். பி., வாலிப முன்னணிச் செயலாளர்கள் திருவாளர்கள் சி. சின்னத்துரை, அருணசலம் ஆகியோர் செயற்குழுக்கூட்டத்திற்கு வருகைதரவில்லை. கூட்டத்திற்கு திரு. நா. செல்லையா தலைமை வகித்தார்.

அரசியல் மகாநாடு, இலக்கிய மகாநாடு, தொழிலாளர் மகாநாடு என்று மூன்று பிரிவுகளாக மகாநாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படவிருக்கின்றன. மகாநாட்டின் இரண்டாம் நாள் எல்லாத் தேர்தல் தொகுதிகளிலிருந்தும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு மாவிட்டபுரத்தை வந்தடையும். ஐயாயிரம் பேர் கொண்ட தொண்டர் அணிவகுப்பும், தொண்டர் சூளுரைத்தலும் சிறப்பான நிகழ்ச்சியாக இருக்கும்.

மூன்றும்நாள் தெல்லிப்பழையிலிருந்து ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி. திரு. எம். திருச்செல்வம், திரு. செ. இராஜதுரை முதலானோர் மாவிட்டபுரம்வீதி வழியாக காங்கேசன்துறைக் கோட்டைக்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுவர், வழிநெடுகிலும் இவர்களுக்கு மகத்தான வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும்.

ஒவ்வொரு விஷயத்திலும் வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவென உபகுழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மகாநாட்டின் நிகழ்ச்சி நிரல் இம்மாதம் 11-ம் தேதி யாழ்ப்பாணத்தில் கூடும் செயற்குழுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்படும். தமிழகத்திலிருந்து வரும் பேச்சாளர்களின் பெயர்கள் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை தமிழகத்திலிருந்து பேச்சாளர் வருகை சம்பந்தமான நடவடிக்கைகளை மட்டக்களப்பு எம். பி திரு. செ. இராசதுரைமேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—

## 3 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், வியா.
பூநகரி-நல்லூர் கொலை வழக்கில் எதிரிக்கு 3 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வழக்கு 3-வது தினமாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி நல்லூரில் செல்லப்பா வல்லிபுரம் என்பவர் சின்னையா ஐயம்பிள்ளை என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாகவும், சின்னையா சதாசிவம் என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் எஸ். நாகராசா, புறக்டர் ஏ. அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் எல். பாலக்குமார் ஆஜரானார்.

முதலாவது குற்றச்சாட்டில் 3 வருட கடூழியமும், 2-வது குற்றச்சாட்டுக்கு ஒன்றரை வருட கடூழியமும் ஏககாலத்தில் விதிக்கப்பட்டன.

## வருடாந்த கலைவிழா

குரும்பசிட்டி, செவ்.
யாழ்ப்பாணம் பிரதேசக் கலைமன்றம் தனது வருடாந்த கலைவிழாவையொட்டி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கலை, கைப்பணி, விவசாயப் பொருட்காட்சியை கல்வி கலாச்சார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்ல இம்மாதம் 26-ந் திகதி மங்கள குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைப்பார் என்றும் இந்நிகழ்ச்சிக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமை தாங்குவார் என்றும் தெரிகிறது.

திறந்தவெளி அரங்கில் கிராமிய நடனங்கள், நாட்டுக்கூத்து, தவில் கச்சேரி, இன்னிசைக் கச்சேரிகள் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர் செய்து முடித்துள்ளனர்.

இறுதி நாளன்று உள்ளூராட்சி மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் விசேஷ விருந்தினராகக் கலந்துகொண்டு நாடகப் போட்டியில் வெற்றி பெறும் நாடக மன்றங்களுக்குப் பரிசுக் கேடயங்களை வழங்குவார்.

—

## வியட்னும் அறிக்கை வெளியிடப்பட்டது

கொழும்பு, செவ்.
வியட்னும் நெருக்கடி சம்பந்தமான அறிக்கை இன்று வெளியிடப்பட்டது.

வியட்னும் நெருக்கடிகளை நேரில் ஆராய்ந்து வருமாறு இலங்கை அரசாங்கம் அண்மையில் இருவரை தென் வியட்னுமுக்கு அனுப்பியிருந்தது.

## பிரதமர் டட்லி லண்டன் செல்வார்

கொழும்பு, செவ்.
பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, காமன்வெல்த் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு லண்டன் செல்லவிருக்கிறார் மகாநாட்டில் இவருடன் டாக்டர் ஜி. பி. மலலசேகராவு கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(5-ம்கலத் தொடர்ச்சி)

மையும் கொடுக்க வேண்டும்.

பல மொழி பேசும் நாட்டிற்கு சோவியத் நாடு எடுத்துக் காட்டு. இரு மொழி பேசும் நாட்டிற்கு கனடா எடுத்துக்காட்டு.

இலங்கையின் மொழிப் பிரச்சினையை வேண்டுமானால் ஆங்கிலேயன் தீர்த்துவிட்டுச் சென்றிருக்கலாம். தீர்த்திருந்தால் அவர்கள் முன்னமேயே வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் அதனால் அவர்கள் தீர்க்க முடியாத ஒரு சிக்கலையே ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

சண்டைகள் தான் அந்நியரைப் அழைப்பதென்பது வரலாறாகும். இதை உணராது நடந்தால் பழைய இன்னல் மீண்டும் வரலாம் இதே முறையில் இலங்கை மொழிப் பிரச்சனை, தோட்டத் தொழிலாளர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் இஸ்லாமியரும் மொழியால் ஒன்றுபட்ட சகோதரரே. இந்நாட்டு மக்களின் ஒற்றுமையைப் பொறுத்துத் தான் ஜனநாயகம் இருக்கிறது. 21 வயது பெற்று வாக்காளராகின்றவர்கள் பரந்த புத்தியையும் பெற வேண்டும்.

சிறுபான்மையினராகிய தமிழர்கள் ஒன்றுபட்டு உடைக்க முடியாத ஜாதியாக நின்றாலொழிய மொழிப்பிரச்னை தீராது

இலங்கைக்குள் எண்ணிக்கையால் இருபது லட்சமாக இருக்கலாம். ஆனால் எண்ணத்தால் தமிழன் என்ற நிலை வந்தபின் சகோதரத்துவத்தாலேயே பிரச்னையைத் தீர்க்கமுடியும். ஒன்றுபடாத ஜாதி உரிமையைப் பற்றிப் பேசுவதில் பிரயோசனமில்லை.

இலங்கைத் தோட்டத் தொழிலாளரின் நிலை வேறு உலகத்தில் காணாத அளவில் கேவலமானதென்பதைநேரிலேயே பார்த்துத் தெரிந்து கொண்டேன். மூன்றும் மொழி ஆதிக்கத்திற்காக இரண்டாம் மொழியை எதிர்ப்பதால் நமது மொழி பாதுகாப்பைப் பெற்றுவிட முடியாது.

இலக்கிய கர்த்தாக்கள் இலக்கிய பரிவர்த்தனைக்காகவேனும் சிங்களம் படிக்கவேண்டும். தமிழனின் உள்ளத்தில் தமிழ் உணர்ச்சி இல்லாவிட்டில் இமயத்தைப் பெற்றும் பிரயோசனமில்லை

தமிழனுக்கு வாழ்வு வரும் வரை சிவஞானம் ஓயமாட்டான்''

# அன்னப்போல் அலங்கரித்த அழகு ரதத்தில் பிரதமர் பவனி

## வீடுகள், வீதிகள் தோறும் மக்கள் அளித்த வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன்
ஈழநாட்டின் பெருந்தலைவர், தேசிய அரசாங்கத்தின் பிரதமர் டட்லி சேனநாயக்கா மத்தியில் கம்பீரமாக நிற்க தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு பக்கத்திலும், மலைநாட்டுத் தலைவர் திரு எஸ். தொண்டமான் மறுபக்கத்திலும் இடையில் மந்திரி ஆசோகா கருணரத்தின ஆமர்ந்திருக்கக் காட்சியளிக்க அன்னப்பட்சி போன்று அலங்கரிக்கப்பட்ட அழகு ரதத்தில் யாழ்ப்பாண நகரத்து முக்கிய வீதிகளில் நேற்று பவனி வந்தனர்.

வீதிகளெல்லாம் மகர தோரணங்களால் அழகுபடுத்தப்பட்டிருந்தன. நாச்சிமார்கோவிலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது.

வீட்டுக்கு வீடு பூரண கும்பங்கள் வைத்து, பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு தமது உள்ளங்கனிந்த மகிழ்ச்சியையும், மரியாதையும் செலுத்திக்கொண்டிருந்தனர். பெரியார்களும், பெண்களும், சிறுவர்களும், தொழிலாளர்களும் காங்கேசன்துறை வீதியில் ரதம் வந்துகொண்டிருந்த போது பிரதமரைக் காத்துடித்த ஒரு வயோதிப மாது எப்படியோ தன் கைகளைத் தூக்கி பிரதமருக்கு வணக்கம் தெரிவிக்க முயன்ற காட்சியும், அதற்குப் பதிலாகப் பிரதமர் தன் நன்றியை பொலிவுமிக்க புன்னகையால் காட்டி, கை கூப்பி வணங்கியதும் பலரையும் கவரக்கூடியதாகவிருந்தது.

பிரதமர் ஊர்வலமாக கஸ்தூரியார் வீதி, மானிப்பாய்வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய பல இடங்களால் அழைத்து வரப்பட்டு கூட்டம் நடக்கவிருக்கும் இடமான யாழ். முற்றவெளியை வந்தடைந்தது.

கொழும்புத்துறையிலிருந்து ஆரம்பமான மற்றொரு ஊர்வலத்தில் மந்திரிகள் திரு பிலிப்குணவர்த்தன, குருள்ளே, வவுனியா எம் பி திரு. ரி. சிவசிதம்பரம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

இன்னுமொரு ஊர்வலம் ஓட்டுமடத்திலிருந்து கூட்டம் நடக்கும் இடத்தை வந்தடைந்தது இந்த ஊர்வலத்தில் மந்திரிகள் மூகமது, விஜயமானே, உதவி மந்திரி நயினுமரிக்கார், கல்குடா எம் பி திரு டபிள்யூ தேவநாயகம், செனட்டர் ரணசிங்கா ஆகியோர் கலந்துகொண்டனர்

# "உழைப்புக்கு அழைப்புக்கொடுத்த நாட்டிற்குச்சென்றவனே தமிழன்"

## ம. பொ. சி. கருத்து

வெள்ளவத்தை, செவ்.
"தமிழினத்தவர் சர்வதேச இனத்தவராவர். தென்னிந்தியாவின் ஒரு மூலையில் மட்டும் வாழக்கூடிய குறுகிய இனத்தவனல்லன் சர்வதேசசுரண்டலுக்காக அவன் வெளிநாடு செல்லவில்லை. சர்வதேச செழிப்புக்காக உழைத்தவன் தமிழன். உழைப்புக்கு அழைப்புக் கொடுத்த நாட்டிற்கு ஓடிச் சென்று உழைத்துப்பிழைத்தவனே தமிழன்'' என்று இலங்கை ம பொ. சி. மன்றத்தினரின் பொதுவரவேற்பில் பேசுகையில் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் குறிப்பிட்டார்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. எம் பி. பாரதி தலைமை தாங்கினார். திரு. இளவைமாறன் வரவேற்புரை வழங்கினார். லடிஸ் வீரமணி வாழ்த்துப்பா பாடினார்.

இதைத்தொடர்ந்து திருவாளர்கள் எப் எக்ஸ் ஸி நடராஜா, ஏ அசீஸ், க நவசோதி, கம்பதாசன், மணவைத்தம்பி, மு வேலாயுதம் ம சே அருள், வி கோபால கிருஷ்ணன், சங்கர், ரா. முநாகலிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் தனது பாராட்டுரையின் போது இலங்கையின் அரசியலை நன்குணர்ந்து புரிந்து கொண்டஒரு தலைவரே மா பொ சி என்று குறிப்பிட்டார்

தனது உரையின்போது சிலம்புச்செல்வர் ம பொ சி குறிப்பிட்டதாவது:

இந்தநாட்டுத் தமிழரின் நிலையையும், சிங்களவர்க்கும் தமிழர்க்குமிடையில் உறவுவளரும் முறையினையும் அறிந்துபோகவே வந்துள்ளேன். ஆசை காட்டித் தமிழரை ஏமாற்றி அழைத்துவந்தான் ஆங்கிலேயன். காடுகளை மேடாக்கி நாடுகளை நகர்களாக்கி உழைப்பை அளித்தவன் தமிழன்.

ஆங்கிலேயன் இருநூறு ஆண்டுகளாக ஏற்படுத்தி விட்டுச்சென்ற மிச்சசொச்சமான பிரச்சினையே தமிழர் பிரச்னை: மொழிப்பிரச்னையாகும் இதனை ஒருவரைஒருவர் அடக்குவதன்மூலம் தீர்க்கமுடியாது. அடக்குமுறையானது மீண்டுமொரு ஏகாதிபத்தியத்திற்கே வழிவகுக்கும்".

### தமிழுக்கு சலுகையில்லா உரிமை

ம. பொ. சி. மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"சிறுபான்மை மொழி வேறு பிரதேச மொழி என்பது வேறு சிதறிக்கிடக்கக் கூடிய சிறுபான்மையினரின் மொழிக்கு சலுகை கொடுக்கலாம். ஆனால் பிரதேச மொழியாகிய தமிழுக்கு சலுகை மட்டுமல்ல உரி

(3-கலம் பார்க்க)

பிரகாசமான சலவைக்கு
★ ரொடின் நீல சோப் ★
காஞ இன்டஸ்றீஸ்
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்குப் பகுதி பஸ் சேவை சீர்கேடு

## மந்திரிக்கு தமிழரசு எம். பி. க்கள் புகார்

யாழ்ப்பாணம், வியா. வடக்கு கிழக்கு மாகாணங்களில் போக்குவரத்து சேவைக்குப் போதிய பஸ்கள் இல்லையென்றும் பஸ் சேவையை சீர்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் தேசியசேவைகள் அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

பஸ்களின் பற்றாக்குறை காரணமாக இப் பகுதியிலுள்ள உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்களும் தங்கள் வேலைத் தலங்களுக்கு உரிய நேரத்தில் போய்ச் சேர முடியாதிருப்பதாகவும் இந்நிலையை இட்டு தாம் வருந்துவதாகவும் எம். பி. க்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மேலும் அதிக பஸ்களை அனுப்பும்படி இவர்கள் கேட்டுள்ளனர்.

# சரசாலை சம்பவம்: ஒருவருக்கு றிமாண்ட்

கொடிகாமம், புதன் சாவகச்சேரியிலுள்ள சரசாலை எனுமிடத்தில் ஏற்பட்ட கத்திச்சண்டையில் கந்தன் சின்னத்தம்பி (50 வயது) என்பவர் பலியானது சம்பந்தமாக சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வல்லி கந்தன் இம்மாதம் பதின்மூன்றும் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கழுத்தில் கத்திவெட்டுக் காயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கந்தன் சின்னத்தம்பி பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குகொண்டுவரப்பட்டு இங்கு மரணமானார்.

இவரது மரணவிசாரணையின்போது இறந்தவரின் மகன் கதிர்காமசேகரம் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"குஞ்சன் சின்னத்தம்பி விட்டில் நான் இருந்த பொழுது எனது தந்தை அங்கு வந்து நடுவிலான் வல்லன் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாக சமாதானப் பேச்சு நடத்த வரும்படி அழைத்தார். நாங்கள் நான்குபேர் அங்குபோனோம். ஒற்றைவழிப்பாதையால் நாங்கள் சென்றுகொண்டிருந்தபொழுது தந்தை "கந்தன் வெட்டிப் போட்டான்" என்று கத்தியவாறு உடனே நிலத்தில் விழுந்தார். அப்பொழுது பயங்கரமான முறையில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதிர்த்திசையாக வந்த சின்னப்பொடியன் வேலன் என்பவர் கணேசன் கையை வெட்டினார். நான் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு பொலிசாருடன் திரும்பினேன். எனது தந்தை இரத்தவெள்ளத்தில் கிடந்தார்".

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு யு.ஜி. டி. சில்வா விசாரணைகள் நடத்தி வருகிறார்.

விசாரணையின் முடிவில் கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

## மனைவியை கிணற்றில் விழுத்தியதாக வழக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, புதன் கெருடாவிலைச்சேர்ந்தசிற்றம்பலம் துரைராசா என்பவர் தனது மனைவி அரியம்மாவை கிணற்றில் தள்ளி விழுத்தி கொலை செய்ததாக வல்வெட்டித்துறை பொலிசாரால் தொடரப்பட்டவழக்கு பருத்தித்துறை நீதிபதி றுபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இ. நல்லம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்த தினம் காலை எனது பனங்காணியில் நுங்கு பொறுக்குவதற்குச் சென்றேன். அப்பொழுது அரியம்மா கிணற்றடியில் போர்த்துக்கொண்டு வாயில் கையை வைத்துக்கொண்டு நின்றார். அந்தநேரம் ஏறக்குறைய 7 மணியிருக்கும். பிறகு நுங்கு பொறுக்கிக் கொண்டு வீட்டுக்குப் போனேன். சிறிது நேரத்தின்பின் அரியம்மாவின்வீட்டுப்பக்கம் குளறிச் சத்தம் கேட்டது. சத்தம் கேட்டதும் அவ்விடம் வந்து பார்த்தபோது அரியம்மா கிணற்றில் விழுந்து கிடக்கக் கண்டேன். அதன்பின் அவ்விடம்வந்த பொலிசாருக்கும், மாஜிஸ்டிரேட்டுக்கும்வாக்குமூலம் அளித்தேன்.

கான்ஸ்டபிள்களான திரு வி எச் பெரேரா, திரு பி வி குணவர்த்தன ஆகியோர் சாட்சியமளித்தபின் நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 12-ந் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## தியேட்டரில் கலகம் செய்தனராம் ரூ.1,000 பிணையில் செல்ல உத்தரவு

வல்வெட்டித்துறை, புதன் கடந்த மாதம் 31ந் தேதி பருத்தித்துறையில் உள்ள ஒரு தியேட்டரில் அதே ஊரைச் சேர்ந்த ஏ. ஜீவரத்தினம், இ. நவரத்தினம், ம. அருச்சுனராசா, த. தேவராசா, பி. அருளானந்தம், சுந்தரலிங்கம், சு. சிவபாதலிங்கம், ஸ்ரீஸ்கந்தராசா, மூ ரகுநாதன் ஆகியோர் கலகஞ்செய்து தியேட்டரில் இருந்த ரசிகர்களுக்கு இடைஞ்சலை விளைவித்ததாக பருத்தித்துறைப் பொலிஸாரால்பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபொழுது நீதிபதி ஒவ்வொருவரையும் தலா 1,000 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு இம்மாதம் 12ந் தேதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலை வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இலங்கைத் தமிழ் பௌத்த சங்கம்

## பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன் 1962ம் ஆண்டில் பௌத்த மதத்தை தழுவி, இன்று அதிகரித்துவரும் தொகையினராகிய தமிழ்ச் சிறுபான்மை இன அங்கத்தவராகிய நாங்கள், தங்களிடம் சமர்ப்பிக்கும் இம்மகஜரில் குறிப்பிட்டுள்ள நியாயமான கோரிக்கைகளைத் தாங்களும், தங்கள் மந்திரி சபை அங்கத்தவர்களும் ஆராய்ந்து, தேவையான உதவிகளை அளிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு அகில இலங்கைத் தமிழ் பௌத்த சங்கம் சமர்ப்பித்த மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

கிறிஸ்தவராக மாறி மிஷன்களின் உதவியுடன் முன்னேற்றம் அடைந்துள்ள கிறிஸ்தவர்களுடன் ஒப்பிடுகையில் நாம் கல்வித் துறையில் மிகவும் பின்தங்கி உள்ளோமென்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம். இந்த நிலையிலும், அரசாங்க உத்தியோகம் பெற எமது பிள்ளைகளுக்கு தராதரமளிக்குமுகமாக நாமாகவே பௌத்தம், சிங்களப் போதிக்கும் மூன்று பாடசாலைகளைத் தொடக்கியுள்ளோம்.

நாங்கள் அரசாங்கத்திடம் பலமுறை முறையிட்டும், கரவெட்டி, அல்வாய், அச்சுவேலி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள இம் மூன்று பாடசாலைகளும் இதுவரை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படவில்லையென்பதை உங்கள் அனுதாபத்துக்கும் கவனத்துக்கும் கொண்டுவர விரும்புகிறோம். இவற்றை பொறுப்பேற்கத் தாங்கள் ஆவன செய்வீர்களென நம்புகிறோம்.

பௌத்தர்களாகிய நாம் எமது சொந்த முயற்சியிலேயே ஏதாவது செய்யப் பெரிதும் விரும்புகிறோம், ஆகவே எமது பிள்ளைகள் வேலைசெய்து சுதந்திரமாக வாழ உதவிசெய்யும்வகையில் நெசவு நிலையங்கள் போன்றவற்றை நிறுவ எமக்கு நீங்கள் உதவி அளிக்கவேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறோம், மாணவ ஆசிரியர் நியமனம், பயிற்சிக்கல்லூரிகளில் அனுமதி போன்றவற்றை அளித்து, அரசாங்க உத்தியோகங்களில் ஒரு பகுதியை எமது படித்த ஆண், பெண் பிள்ளைகளுக்கு ஒதுக்கித் தரும்படியும் தங்களைக்கோருகிறோம்.

எம்மில் அநேகருக்கு இருக்கக்காணி இல்லை. அவர்கள் மற்றவர்களின் வளவில் வாழ்வதுடன், தமது சொந்தத்தில் எதுவும் செய்ய முடிவதில்லை. ஆகவே, அண்மையில் இருக்கக்கூடிய முடிக்குரியகாணிகளை இவர்களுக்கு அளித்து இத்துரதிர்ஷ்டசாலிகள் அங்கு வசிக்க உதவி செய்யுமாறு வேண்டுகிறோம்.

கரவெட்டியிலுள்ள எமது மக்களுக்காக நாம் தற்போது ஓர் விகாரையைக் கட்டி வருகிறோம். பள்ளிக்கூடங்களைக்கட்டுவதில் ஏற்கனவே ரூபாய் 32,000 செலவிட்டிருக்கிறோம். அதனால் ரூ. 10,000 க்கும் மேற்கடன்பட்டுள்ளோம். ஆகையினால் பள்ளிக்கூட வளவிலேயே விகாரைகளைக் கட்ட எமக்கு நிதிஉதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு மதியான பணிசும் நாங்கள் கொடுத்து வருகிறோம். மதவழிபாட்டில் பங்குபற்ற எங்களில் அநேகர் பல தூரம்நடந்து யாழ்ப்பாணத்திலுள்ள நாகவிகாரைக்கு வரவேண்டியுள்ளது. நாம் கட்டவிருக்கும் விகாரைகளில் நடைபெறும் மதக் கிரியைகளை ஆற்ற நாகவிகாரைக்குப் பொறுப்பாகவுள்ள வணக்கத்துக்குரிய மதகுரு எமது கோரிக்கையை ஏற்று ஒப்புக் கொண்டுள்ளாரென்பதைத் தங்களுக்கு உறுதி கூற விரும்புகின்றோம்.

அத்துடன் காலத்துக்குக் காலம் எமது எதிரிகள் எமக்கு விளைக்கக்கூடியஇன்னல்களிலிருந்தும் எம்மைக்காப்பாற்றி, அச் சந்தர்ப்பங்களில் போதிய பாதுகாப்பும் அளிக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

# மட்டக்களப்பில் குடிநீர் தட்டுப்பாடு

மட்டக்களப்பு, புதன் தற்பொழுது நிலவும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக குடிநீர்ப் பிரச்னையால் மட்டக்களப்பு பெருமளவு பாதிக்கப்படலாமெனத் தெரியவருகிறது. இதன் முதன் எதிரொலியாக மட்டக்களப்புப் பகுதியிலுள்ள பாடசாலைவிடுதிகள் மூடப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது

இதுசம்பந்தமாக நீர்விநியோகப் பகுதியினரிடம் பல தடவைகள் முறையிட்டபொழுதிலும் அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது பாடசாலை மாணவர்கள் கடந்த சில தினங்களாகப் பாடசாலைகளில் குழாய்நீர் இல்லாமல் பெரிதும் கஷ்டப்பட்டு வருகின்றனர். அரசாங்கக் காரியாலயங்களில் போத்தல்களில் குடிநீர் வைக்கப்பட்டுள்ளது

நகரப் பகுதியில் குழாய் நீர் காலையில் இரண்டு மணி நேரமும் மாலையில் இரண்டு மணி நேரமும் விநியோகிக்கப்படுகிறது.

## 'குளங்களைத் திருத்த வேண்டும்'

வெலிகம, புதன் 'நாம் உணவு விஷயத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்வதாக இருந்தால் நமது நாட்டிலுள்ள குளங்களைத் திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' இவ்வாறு முன்னைநாள் பிரதம நீதியரசர் திரு எச். ஹேமாபாலநாயகா நகதுலையிலுள்ள பாடசாலையொன்றின் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

நாட்டில் விவசாயத்துக்கு அதிக ஊக்கம் அளிக்கப்பட்டால் இங்கிருந்து வெளிநாட்டுக்குச்செல்லும் பணத்தில் அதிகமான தொகை மிச்சப்படுத்தலாமென்றும் திரு. பஸநாயகா தெரிவித்தார்.

## சிறுபான்மை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியின் தரத்தை உயர்த்தவேண்டுமென்றும், யாழ்ப்பாண மக்கள் பிரதம மந்திரிக்கு அளித்துள்ள வரவேற்பிலிருந்து அவர்கள் பிரதமர் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது புலனாகின்றது என்றும் திரு. நவரத்தினம் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்துக்கும் ஊர்காவற்றுறைக்குமிடையிலிருக்கும் கடல் ஏரியை சுத்திகரித்து பயன்படுத்தினால் யாழ்ப்பாணப் பகுதியில் குடிநீருக்கும் நீர்ப்பாசனத்துக்கும் இருந்துவரும் தண்ணீர்த்தட்டுப்பாட்டை தவிர்க்கமுடியும் என்றும் அவர் கூறினார்.

# ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு

சங்கானை, புதன் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் அத்தியாவசியமான மருந்து வகைகள் இல்லாமையால் நாயாளர் சிலமருந்துகளை வெளியில் வாங்கி ஆஸ்பத்திரியிலுள்ள ஊழியர்களைக் கொண்டே சிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதனால் ஏழை நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுவதாகத் தெரியவருகின்றது.

## உதவிகள் கொள்கைகளை மாற்றிவிடாது

புதுடில்லி, அக. 10 நட்பு நாடுகளிடமிருந்து உதவிகள் பெறுவதனால் இந்தியாவின் கொள்கைகளில் மாற்றம் ஏற்படும் என்று அர்த்தமாகாது என்று வெளி உறவு மந்திரி திரு சுவரண் சிங் இன்று இந்திய பார்லிமெண்டில் கூறினார்.

சீனாவுடன் பேச்சுநடத்த இந்தியா முதல் முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லப்படுவதில் அர்த்தமில்லை. அந்தநாடு தாவாக்களை சண்டை மூலம் தீர்ப்பதிலேயே நம்பிக்கை வைத்திருக்கின்றது என்று திரு. சுவரண்சிங் குறிப்பிட்டார்.

## பண்டிதமணியின் உரை நூல்

கொழும்பு, புதன் இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை இந்து மாணவர் சங்கம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் கந்தபுராண தக்ஷகாண்ட உரையினைச் சிறந்தமுறையில் அச்சேற்றி வெளியிடவிருக்கிறது. இதற்கான தொடக்க வேலைகள் முடிவுற்றிருக்கின்றன, ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்கங்களைக்கொண்ட இந்நூல் வருகிற தைப்பூசத் திருநாளன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புதிதாக இந்து சங்கத்தினரால் நிர்மாணிக்கப்படும் இந்து வழிபாட்டுமண்டபத்தில்விசேட முறையில் வெளியிடப்பெறும் இம்மண்டபத்தில் முதன் முதலாக நிகழவிருக்கும் இவ்விழாவில் பண்டிதமணி அவர்கள்பொன்னாடை போர்த்திப் போற்றப்படுவார்கள் இவ்விழா பன்முறைகளிலும் வெகு சிறப்பாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது

கந்தபுராணத்திலேயே தக்ஷகாண்டம் மிகச் சிறப்புற்றதும், சுவையுள்ளதுமான பகுதியாகயிருப்பதுமன்றி, சைவ சித்தாந்தக்கருத்துக்களைத் தெரிவிப்பதாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

## நீரிழிவு நோய்க்கு நிகரற்ற மருந்து

25 வெண்மையான மாத்திரைகள்!

நீரிழிவு நோயினால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவனது முகத்தில் மீண்டும் புன்னகை வரவழைக்கும் திறன் படைத்தவை அவை. இந்த மாத்திரைகளை நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தினால், நீரிழிவு நோயைப் பூரணமாகக் குணப்படுத்தலாம் இதன் பெயர் 'குளோபுரோபமைடு' இது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாகும். உக்ரெய்னிலுள்ள கார்க்கோவ் நகர 'நாளமில் சுரப்புக்கூடம்' இதனைத்தயாரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org